


| சிலம்பு ௩௬ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௨, மார்கழி<br>சனவரி, 1962 | பரல் ௫ |
|---|---|---|

# கோவா விடுதலை

நம்நாடு 1947 ஆம் ஆண்டு விடுதலைபெற்ற ஞான்று புதுச்சேரிப் பகுதி பிரெஞ்சுக்காரர் ஆட்சியிலும் மேற்குக் கடற்கரையில் கோவா, டையூ, டாமன் பகுதிகள் போர்ச்சுக்கீசியரின் ஆட்சியிலும் இருந்தன. கருவிப்போரின்றி அறப்போரின்வழியாகவே இந்தியா ஆங்கிலேயரின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது. மிகப்பரந்த இத்துணைக்கண்டத்தை ஆங்கிலேயர் கடைசியில் இந்தியருக்கே உரிமையாக்கிவிட்டனர். அவர்களைப போலவே பிரெஞ்சுக்காரர்களும், போரச்சுக்கீசியர்களும் தங்கள் மிகச்சிறு இந்தியப் பகுதிகளைவிட்டு வெளியேறிவிடுவர் என்று பல்லாண்டுகளாக இந்தியா எதிர் பார்த்து வநதது. பல்லாணடுகள் தொடர்ந்து செய்துவந்த கடிதப்போக்குவரத்து மூலம் பிரெஞ்சுக்காரரிடம் சிறிது பயன் ஏற்பட்டது. ஐந்தாண்டுகளுக்கு முன்னர் அவர்கள் பாண்டிச்சேரியைவிட்டு வெளியேறிவிட ஒப்புக்கொண்டனர்; பிரெஞ்சுப் பண்பாடு பாதுகாக்கப்பட வேண்டும் என்று விரும்பிச் சில ஒப்பந்தங்கள் செய்துகொண்டு வெளியேறிப் போய்விட்டனர்.

இந்தியாவில் முதன் முதலில் அடிவைத்தவர் போர்ச்சுக்கீசியரே. வாஸ்கோடகாமா என்பவர் 1498 ஆம் ஆண்டு ஆகஃச்டுத் திங்கள் 11ஆம் நாள் கள்ளிக்கோட்டை வந்து சேர்ந்தார். அப்போது அவண் ஆட்சி புரிந்து வந்த சாமொரின் அரசனிடம் வாணிகம் செய்வதற்கு ஒப்புதல் பெற்றார். பின்னர்ப் போர்ச்சுக்கலுக்குத் திரும்பிபபோய்க் கேப்பிரியல் என்பவனை இந்தியாவுக்கு அனுப்பிவைத்தார். இடத்தைக் கொடுத்தால் மடத்

௩௬—15

தைப் பிடுங்குவர் என்ற மொழிப்படி, கேப்பிரியல் சாமொரின் அரசனேயே தாக்க முற்பட்டான்; ஆனல் தோல்வியடைந்து போர்ச்சுக்கலுக்குப் போய்த் தான் உதைபட்டதைச் சொல்லி அழுதான். இதைக் கண்ட வாஸ்கோடகாமா கொதித்தெழுந்து மீண்டும் இந்தியாவிற்குப் பல கப்பல்களில் பீரங்கிகளேயும் வெடி மருந்துகளேயும் கொண்டுவந்தார். எனினும் அவர் படை சாமொரினின் படையைத் தோற்கடிக்க முடியவில்லே. காமா தப்பி ஓடிவிட்டார். அதன் பின் லோபோஸோர்ஸ் என்பவன் ஒரு பெரும்படையுடன் இந்தியா வந்தான். அவனேயும் 1507 இல் சாமொரின் விரட்டியடித்து விட்டார். ஆயினும் இரண்டாண்டுகள் கழித்துக் குசராத்தின் சுல்தானயிருந்த கயஸ் என்னும் ஐந்தாம் படை ஆள் மூலம் போர்ச்சுக்கீசியர் போர்முரசொலிக்காமலேயே டையூவைக் கைப்பற்றி விட்டனர். பலமுறை சாமொரினுடன் தொடர்ந்து சண்டையிட்டு வந்தனர்; எனினும் கள்ளிக்கோட் டையை அவர்களால் கைப்பற்ற முடியவில்லே. அதனல் மேற்குக் கடற்கரையில் வேறு சில இடங்களேக் கைப்பற்றிக் கோட்டை கட்டிக்கொண்டு ஆல்புகர்க் என்ற ஆளுநரை அமர்த்தினர்.

1510 இல் ஆல்புகர்க் கள்ளிக்கோட்டையைத் தாக்கினர். அதில் அவருக்குப் படுதோல்வியே ஏற்பட்டது. அப்போதுதான் கோவாவின் சிறப்புக்களே உணர்ந்தார். 1510 பிப்பிரவரியில் மிக எளிதாகக் கோவாவைக் கைப்பற்றி அங்கு ஒரு கோட்டை யையும் கட்டிவிட்டார். 1513 இல் ஆல்புகர்க் மலாக்காவைத் தாக்கி வெற்றிபெற்றர். பர்மாவில் போர்ச்சுக்கீசியருக்குத் தளங்கள் கிடைப்பதற்கான உடன்படிக்கைகளேச் செய்துகொண் டார். இந்துமாகடலில் அவரைத் தட்டிக்கேட்க ஆளில்லாமை யின் கடற்கொள்ளேகள் மிகுதிப்படலாயின. கொளச்சல் என்ற இடத்தில் வீர விட்டல் என்ற தமிழரின் தீரத்தினல் போர்ச்சுக் கீசியர் விரட்டியடிக்கப்பட்டனர்.

ஆல்புகர்க் கொள்ளே கொலேகளுக்கு அஞ்சாதவர். எனவே கோவாவைக் கைப்பற்றியபோது நகரையே கொளுத்தி எதிர்ப் பட்டவர்களே எல்லாம் கொன்று தள்ளினர். போர்ச்சுக்கீசியர்கள் இந்தியமண்ணில் காலடி வைத்து 463 ஆண்டுகள் முடிந்துவிட்ட போதும் அவர்கள் குருதிவெறி இன்னும் அடங்கவில்லே. போர்ச்சுக்கீசியர் கோவாவைக் கைப்பற்றிய நாள்தொட்டே மக்கள் அவர்களே எதிர்த்துக் கிளர்ச்சி செய்து வந்திருக்கின் றனர். பாதிரிகளே அனுப்பி அவர்களே மதமாற்றம் செய்வதன் மூலம் கிளர்ச்சிகளே அடக்கலாம் என்று போர்ச்சுக்கீசியர் முயன் றனர். ஆனல் பாதிரிகளின் போக்கு மக்களிடையே பெரும் கிளர்ச்சியையே தோற்றுவித்தது. 1587 இல் நடந்த கிளர்ச்சி

யில் பலர் உயிரிழந்தனர். போர்ச்சுக்கீசியப் பாதிரியார்களின் போக்கைக் கண்டித்துக் கோவாவில்வாழ்ந்த தமிழர்கள் நானூறு ஆண்டுகளுக்கு முன்னரேயே தமிழில் போர்ச்சுக்கல் அரசிற்கு விண்ணப்பம் செய்தனர். அவ்விண்ணப்பம் இப்போது போர்ச்சுக்கல் நாட்டில் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறது.

1755 முதல் 1912 வரை இராசபுத்திர வீரர்கள் கோவாவில் இருபது தடவைகளுக்கு மேல் கிளர்ச்சிகள் செய்திருக்கின்றனர். அவர்களுடைய கிளர்ச்சிக்குப் போர்ச்சுக்கீசியர் ஓரளவு பணியவேண்டியது ஏற்பட்டது. அவர்களுக்குச் சில சலுகைகள் அளித்து வந்தனர்.

1946இல் கோவாமக்கள் தங்கள் விடுதலைப் போராட்டத்தை நடத்தினர். டாக்டர் லோகியா இதைத் தொடங்கிவைத்தார். போர்ச்சுக்கீசிய ஆட்சி கடுமையான அடக்குமுறையைக் கையாண்டது. போராட்டத்தலைவர்கள் பலர் 4 வருடம் முதல் 8 வருடம் வரை கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுப் போர்ச்சுக்கலுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். எனினும் இதனால் போராட்டம் நின்றுபோய்விடவில்லை. 1954 இல் மற்றொரு சத்தியாக்கிரக இயக்கம் நடைபெற்றது-கடும் அடக்குமுறை கையாளப்பட்டது. இயக்கத்தின் தலைவரான அந்தோனி டிசுசாவுக்கு 28 ஆண்டுக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. 1955 இல் இந்தியர்கள் இந்த அடக்குமுறையைப் பொறுக்காது கோவாப் போராட்டத்தை ஆதரிக்க முன்வந்தனர். அவர்கள் கருவிகளின்றிக் கோவாவிற்குள் நுழைந்தனரேனும், அவர்கள்மீது போர்ச்சுக்கீசியர் சுட்டனர். இருபத்திரண்டு இந்தியர் உயிர்துறந்தனர்.

கோவா இந்தியாவின் ஒரு பகுதியே. பல நூறாண்டுகள் அதைக் கைப்பற்றி ஆண்டுவருவதனாலேயே அப்பகுதி போர்ச்சுக்கலுக்குரிய நாடாக ஆகிவிடாது. ஆங்கிலேயரையும் பிரெஞ்சுக்காரரையும் போலவே போர்ச்சுக்கீசியரும் அறிவுடைமையினால் தாங்களாகவே நல்லுறவுடன் வெளியேறிவிடுவர் எனப் பதினைந்து ஆண்டுகளாக உரிமை பெற்ற இந்திய அரசு எதிர்பார்த்தது. ஆனால் போர்ச்சுக்கீசியரின் கொடுமைகள் மிகுதியாயின. இந்திய நாட்டின் ஒரு களங்கமாகவே போர்ச்சுக்கீசிய ஆட்சி இருந்துவந்தது. அதனால் கோவாவை மீட்பதற்கு வேண்டுமானால் வன்முறையையும் பயன்படுத்தத் தயங்க மாட்டோம் என்று மைய மக்கள் மன்றத்தில் முதலமைச்சர் நேரு அவர்கள் அறிவித்தார். ஆனால் போர்ச்சுக்கீசியர்கள் காதில் அஃது ஏறவில்லை. போரிடுவதற்காகப் போர்ச்சுக்கீசியர்கள் சில கப்பல்களைக் கோவாவிற்குப் போர்ச்சுக்கலிலிருந்து கொண்டு

வந்தனர். இந்திய அரசு போரிடுவதற்கு என்றும் அஞ்சியதில்லை. ஆயினும் உறவுமுறையாக — அமைதியாகவே — இச் சிக்கலைத் தீர்த்துக்கொள்ள விரும்பியது. ஆனால் போர்ச்சுக்கீசியரின் போக்கில் மாற்றம் ஏற்படவில்லை.

1961 டிசம்பர் 18ஆம் நாள் இந்தியப்படையினர் கோவாவின் தலைநகரான பஞ்சிமை அடைந்தனர். அந்நகரை மூன்று பக்கங் களிலும் சூழ்ந்துகொண்டனர். டையூ, டாமன் பகுதிகளையும் சூழ்நதுகொண்டனர். இந்தியப் படை முன்னேறிக்கொண்டு வருவதை அறிந்ததும், போர்ச்சுக்கீசியர்கள் எதிர்க்க முற்பட வில்லை; தப்பிப் பிழைப்பதற்காக ஓட்டம்பிடித்தனர். இந்தியப் படையினர் பஞ்சிமின் வானூர்தித் துறையைப் பாழடித்தனர். டையூவின் வான்கலத் துறையையும பாழ் செய்தனர். டாமனில் நடந்த போரில் நான்கு இந்தியர்களும் பதினறு போர்ச்சுக் கீசியரும் உயிரிழந்தனர். டையூவில் இந்தியா யாரும் உயிரிழக்க வில்லை. கோவாவில் நூறு போர்ச்சுக்கீசியத் துருப்புககள் கொல்லப்பட்டனர். நூறுபேர் காயமடைந்தனர்.

இந்தியப் படை நுழைந்த $26\frac{1}{2}$ மணி நேரத்திற்குள் போர்த்துக்கீசியர் பகுதிகள் எல்லாம் கைப்பற்றப்பட்டுவிட்டன. 463 ஆண்டுச் கால வேற்றுட்சி இக்குறுகிய காலத்தில், மிக்க உயிரிழப்பின்றியே ஒழிந்தது. இந்தியப்படையினரின் திறமைக்கு இஃது ஒரு நல்ல எடுத்துக்காட்டே. கோவா மக்கள் இந்தியப் படையினரை விரும்பி வரவேற்றதாலும், போர்ச்சுக்கீசியர் எதிர்த்துத் தாக்க முற்படாததாலும் எளிதில் வெற்றி கிடைத்து விட்டது. கோவா விடுதலையால் இந்தியநாடு முழுவதும் மகிழ்ந்தது.

கறுப்பர்கள் வெள்ளையரைத் தாக்கி விரட்டிய ஒரே காரணத் திற்காக, கோவா இந்தியாவுக்கே என்றும் உரிமையானது என்ற உண்மையை மறந்து அமெரிக்கா, பிரான்சு, இங்கிலாந்து போன்ற நாடுகள் இந்தியாவைத் தாக்கிப் பேசத் தொடங்கின. இந்தியா போரினல் வலுத்தாக்குதல் செய்து போர்ச்சுக்கலுக் குரிய பகுதியைக் கைப்பற்றியதாகவும் மீண்டும் போர்ச்சுக்கல் கோவாவைப் பெறும் உரிமையுடையது என்றும் பிதற்றினர். அவர்களுக்கெல்லாம் நேரு அவர்களும், உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் திரு. வி. கே. கிருட்டிண மேனன் அவர்களும் கார ணங்களுடன் விளக்கம் தந்தனர். கோவா விடுதலையுடன் இந்தியா வின் விடுதலை முழுமையுற்றிருக்கிறது. கோவா விடுதலை வெள்ளை யரின் வேற்றுப்புலக் குடியேற்ற ஆட்சிக்கு (Colonialism)ச் சாவு மணி அடித்துவிட்டது.

# பல்கலைக்கழக மொழிவாயில்

உயர்நிலைப்பள்ளிகளின் கல்வி அமைப்பு முறையில் எவ்வாறு சீரிய மாறுதல்கள் செய்ய வேண்டும் என்பதுபற்றியும், இந்தியப் பல்கலைக் கழகங்களில் எம்மொழி பாட மொழியாயிருக்க வேண்டும் என்பதுபற்றியும், அரசினரும் மையக் கல்வி ஆய்வுரைக் குழுவும் ஆராய்ந்து வருகின்றனர்.

பல்கலைக் கழகங்களில் ஆங்கிலத்திற்குப் பதிலாக வட்டார மொழியை ஏற்றுக் கொள்ளுவதா, தேசியப் பொதுமொழியான இந்தியை மேற்கொள்ளுவதா என்பது பற்றி மையக்கல்வி அமைச்சுக்கும், தமிழ்நாட்டரசுக்கும் கருத்து வேறுபாடுகள் இருந்து வருகின்றன. கல்லூரி இளங்கலை வகுப்புகளுக்குக் கலைப் பாடங்களைக் கற்பிக்கத் தமிழே ஏற்புடைய மொழியாகுமெனத் தமிழ் நாட்டரசு கருத்துத் தெரிவித்திருக்கிறது.

அறிவியல் பாடங்களையும் நுண்ணியல், தொழிற்கல்விப் பாடங்களையும் இன்னும் பலகாலத்திற்கு ஆங்கிலத்திலேயே தொடர்ந்து கற்பிக்க வேண்டுமென்று தமிழக அரசு விரும்புகிறது. பல்கலைக் கழகங்களில் ஆங்கிலத்தை ஒதுக்கிவிட வேண்டுமானால், அந்த இடத்திற்குத் தமிழே—இந்தியன்று—தகுதியானது என்று கருதுகிறது. மேலும் இந்தியாவில் உயர்தரக்கல்வி பெற்றோரை ஒன்றுபிணைக்கும் வாயிலாக ஆங்கிலமே நீடிக்கவேண்டுமென்பது தமிழ் நாட்டினரின் விருப்பமாக இருந்து வருகிறது.

பாரதக் கல்வியமைச்சு ஆங்கிலத்திற்குப் பதிலாக வட்டார மொழியன்றி இந்தியே எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் இருக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறது. ஆனால் ஏற்கெனவே வட இந்தியப் பல்கலைக் கழகங்களுட் சில வட்டார மொழிகளில் கல்லூரி இளங்கலைப் பாடங்களைக் கற்பிக்கத் தொடங்கிவிட்டன. அப் பல்கலைக்கழகங்கள் இனி இந்தியை ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்ப்பது பல இடர்ப்பாடுகளைத் தோற்றுவிப்பதாகும்.

அண்மையில் பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் ஒன்றுகூடிப் பேசியஞான்று, பல்கலைக் கழகங்களிலிருந்து ஆங்கிலத்தை அகற்றி விடுவது அறியாமை என்று ஒருமுகமான முடிவுக்கு வந்திருக்கின்றனர். உலகப் பெருமொழியாகத் திகழும் ஆங்கிலத்தைப் புறக்கணிப்பது இந்தியாவின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடுவதாகும். எனவே மைய அரசினர் பல்கலைக்கழக அறிஞர்களின் செவியறிவுறூஉவினை ஏற்று இந்தியை இந்தியக் கல்லூரிகள் எல்லாவற்றிலும் திணிக்கும் பொருந்தாச் செயலை உடனே கைவிடுவார்களாக!

---

# தமிழிசை மாநாடு

கடந்த பல ஆண்டுகளாகப் பண் ஆராய்ச்சி நடத்திவரும் சென்னைத் தமிழ் இசைச் சங்கம் அண்ணாமலை மன்றத்தில் இவ்வாண்டும் 25 - 12 - 61இல் பண் ஆராய்ச்சிப் பன்னிரண்டாம் மாநாட்டைக் கூட்டி இசையறிஞர் பெருமக்களைப் பழந் தமிழ் இசையைப்பற்றி ஆய்வு செய்யத் தூண்டியது. அம் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய நாட்டிய கலாகேசரி வழுவூர் பா. இராமையா பிள்ளை அவர்கள் தம் தலைமையுரையில் தமிழ்ப் பண்களிலிருந்தே கருநாடக இசையின் பல்வேறு இராகங்களும் முகிழ்த்திருக்கின்றன என்பதை வற்புறுத்திக் காட்டியுள்ளார். இந்திய நாட்டிற்கே பெருமை நல்கும் கருநாடக இசையின் மூலம் தமிழிசையே' என்பதை நாம் மறத்தல் கூடாது. தொல்காப்பியத்திலும், சங்கநூல்களாகிய பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, புறநானூறு, பரிபாடல் முதலிய நூல்களிலும், சிலப்பதிகாரத்திலும் தமிழ்ப் பண்புகளைப் பற்றிய குறிப்புக்கள் எண்ணிலாதன கிடைக்கின்றன.

பன்னூறு ஆண்டுகளாக வேற்று நாட்டினரின் ஆட்சி தமிழ் நாட்டில் வேரூன்றி யிருந்ததால் தமிழ்ப் பண்களை நாம் வளர்த்து வரத் தவறிவிட்டோம். அதனால் பலவிதத் தமிழ்ப் பண்கள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதை இப்போது அறிந்துகொள்ள முடியவில்லை. பொழுதிற்கும், இடத்திற்கும் ஏற்றவாறு பண்களைப் பாடவேண்டுமென்று தமிழ்ப் பண்டையோர் நுண்ணிதின் உணர்ந்து வகுத்திருந்தனர். பழந்தமிழ் இசை தேவாரப் பாக்களில் ஓரளவு பாதுகாக்கப்பட்டுள்ளது. எனினும் தேவாரப் பண்கள் எல்லாவற்றின் இயல் புகளையும் தெள்ளிதின் உணரக் கூடவில்லை. வழி முறையாகத் தேவாரங்களைப் பண்ணோடு ஓதி வரும் ஓதுவாமூர்த்திகளைக் கொண்டு, தேவாரப் பண்களின் இயல்புகளைப் பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டியிருக்கிறது.

தமிழ்ப்பண் ஆராய்ச்சி தமிழ்ப் பண்பாட்டின் உயர்வுக்கு இன்றியமையாதது. ஒரு நாட்டினரின் கலைவளமே அவர்களின் நாகரிகப் பண்பாட்டின் அளவுகோலாகலின், தமிழர்கள் தம் முந்தையோரின் செல்வங்களாகிய நடனம் ஓவியம், சிற்பம் போன்ற இன்கலைகளை இனியேனும் கருத்துறப் போற்றிவளர்த்து வரவேண்டும். தமிழர் என்று தலைநிமிர்ந்து நிற்பதற்கு இத் தகைய கலைகளைப் போற்றினால்தான் முடியும். தமிழ்மொழியோடு இசையும் பிரிக்க முடியாத தொடர்பு கொண்டிருந்தது. அந்நிலையை மீண்டும் பிறப்பிக்கச் செய்தல் இசைத் தமிழறிஞர்களின் இன்றியமையாத கடனாகும்.

# தமிழ் இசை பத்தொன்பதாம் விழா

## தொடக்கவுரை

தமிழிசைச் சங்கத்தின் பத்தொன்பதாம் விழாவும், பண் ஆராய்ச்சி பன்னிரண்டாம் மாநாடும் முறையே 23-12-61, 25-12-61 ஆகிய நாட்களில் சென்னை அண்ணாமலை மன்றத்தில் மிகச் சிறப்புடன் நடைபெற்றன. இருமாநாடுகளுக்கும் வழுவூர் திரு. இராமையா பிள்ளையவர்கள் தலைமை தாங்கினர். இசை விழாவிற்குத் திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் தொடக்கவுரை ஆற்றினர். கவிதை நடையில் அமைந்துள்ள அவ்வுரையின் சுருக்கம் வருமாறு:

**இசையின் சீர்மை**

முத்தமிழ் என்னும் மூன்றினுள் ஒன்று
இத்தரை போற்றும் இசையது வாகும்.
இயற்கையை நோக்கிடில் எங்கும் இசைதான்!
குயில்குரல் எடுத்துக் கூவுவ தோர்இசை;
உலகினர் வாழ உதவிடும் காற்று
இலைகளின் ஊடே எழுப்புவ தோரிசை;
மலர்வரும் வண்டு வழங்குவ தோரிசை;
வழிந்திடும் கருவி பொழிந்திடல் ஓரிசை;
முழங்கிடு கடலின் முழக்கமும் ஓரிசை;
வெளியினுள் ஆழ்ந்து விளங்குவ தோரிசை;
ஒளிதரு தீயினும் உள்ளதோர் இசையே!
இசை; இசை; உலகம் இசைமய மாகும்!

செருக்குடை அரக்கன் அன்று சிவனவன் சிந்தை தன்னை
உருக்கிய திசையால் அன்றோ? உமையவள் நாதன் ஊன்றி
நெருக்கிய விரல்ந கர்த்த நினைத்ததும், இசைவெள் ளத்தைப்
பருகிய தாலே கொண்ட பரவசந் தன்னால் அன்றோ?

கல்லெனும் நெஞ்சங் கூடக் கனிந்திடும் இசையால் என்று
சொல்லிடில், இல்லை யென்று துணிந்தெவர் மறுக்க வல்லார்?
நல்லிசை இன்பங் காண நாடியே முயன்று கற்கும்
கல்வியும் தேவை யில்லை; காதுகள் போது மன்றோ?

செவிவழி இசைபு குந்து சிந்தையைத் தழுவும்; அங்கே
குவிந்துள துயரம் தீர்க்கும்; குறைவிலா இன்பம் சேர்க்கும்.
தவறென இதைம றுப்போர் தரணியில் இருப்பா ரானால்
செவிடரே அன்னார் என்று செப்புதல் பொருத்த மாகும்!

திசையெலாம் கலந்த கண்ணன் தீங்குழல் இசையைக் கேட்டே
அசைந்திடல் இன்றி மான்கள் அழகுறும் ஓவி யம்போல்
பசிமறந் திருந்த காட்சி, பழந்தமிழ்ப் பாடல் காட்டும்.
இசையதன் புகழை மேலும் இயம்பிடல் என்னு லாமோ?

செடிகளும் இசையைக் கேட்டுச் செழித்தநற் செய்தி தன்னைப்
படித்துநாம் அறிந்தோம். என்றும் பாரிலே இசைவ ளர்ப்போம்.
கொடுமையே கருதும் நெஞ்சும் குளிர்ந்திட இசைபொ ழிந்து
நடுங்கிடத் தேவை யில்லா நல்லதோர் உலக மைப்போம்.

## தலைமைப் பேருரை

இசைவிழாவிற்குத் தலைமை தாங்கிய திரு. வழுவூர், பா. இராமையா பிள்ளையவர்கள் தமிழகத்தின் பண்டை இசைக்கலை, ஆடற் கலை ஆகியனபற்றி அரியதொரு சொற் பொழிவாற்றினர். அதன் சுருக்கம் வருமாறு:

“தமிழ் நாட்டில் பல ஆயிர வருடங்களுக்கு முன்பிருந்தே ஆடற்கலையும், இசைக்கலையும் தோற்கருவி, துளைக் கருவி நரம்புக் கருவி முதலிய இசைக் கருவிகளும், அதற்கான இலக்கணமும் வகுத்து, நமது ஆன்றோர்களால் போற்றி வளர்க்கப்பட்டு வந்திருக்கிறது.

ஆடற்கலை

நம் தமிழ்நாடு மிகப் பழைய காலம் முதலே ஆடற் கலையில் பெரும் சிறப்பு வாய்ந்திருந்தது என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை.

சிவபெருமான் தில்லையில் ஆடிய கூத்தைத் தேவாரம் பல விடங்களில் போற்றுகிறது.

“நட்டங்களாடும் பரமனார்”

“சொக்கம் பயின்றீர்”

“குடமுழவச் சரிவழியே அனல்கை யேந்திக்
கூத்தாட வல்ல குழகனுகி”

கண்ணன் ஆடிய குடக் கூத்தையும் குரவைக் கூத்தையும் ஆழ்வார்கள் சிறப்பாகப் பாடியுள்ளார்கள்.

சிலப்பதிகாரத்தில், அரங்கேற்று காதையில் அடியார்க்கு நல்லார் உரையும், பண்டைத் தமிழகத்தில் ஆடற்கலை பெற்றிருந்த சிறப்பை நன்கு விளக்குகின்றது. மாதவியின் நாட்டியம் அரங் கேறியபோது, “நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து” ஆடிய

தாகக் கூறப்படுகிறது. இது இளங்கோவடிகளால் குறிப்பிடப் படுகின்றது. இன்னும் ஆடலாசிரியன் அமைதி கூறுங்கால், 'இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து' என்றும் சாற்று கின்றார். இதனை விளக்கும் அடியார்க்கு நல்லார் இருவகைக் கூத்து 'சாந்தியும் விநோதமும்' என்று கூறி அவற்றின் உட்பிரிவு களைக் கொடுத்துள்ளார்.

"சாந்திக் கூத்தும் விநோதக் கூத்து மென்று
ஆய்ந்துற வகுத்தனன் அகத்தியன் தானே."

சிலப்பதிகாரத்தில் உள்ள ஆய்ச்சியர் குரவை, பண்டைத் தமிழிசைக்கும், ஆடற் கலைக்கும் வற்றாதோர் கருவூலமாகும். குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழு இசை நரம்புகளும், கைகோத்து இறைவனைப் பாடி ஆடுவ தாக அமைந்துள்ள இக்கற்பனை, மிகவும் அழகியது; அரியது.

"செந்நிலை மண்டிலத்தாற் கற்கடகக் கைகோத்து
அந்நிலையே ஆடற்சீர் ஆய்ந்து."

அவர்கள் முல்லைத் தீம்பாணியில் பாடிய

"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் ஆனுள் வருமேல் அவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ."

முதலிய இன்னிசைப் பாடல்கள் நம் கருத்தை விட்டு என்றும் அகலா.

நம் தமிழ் நாட்டில் மூவேந்தர் ஆட்சிக்கு முன்னிருந்தே கீதம், வாத்தியம், நிருத்தம், என்று சொல்லப்பட்டதும்; தோற் கருவி, துளைக்கருவி, நரம்புக் கருவி இவற்றைத் தோற்றுவித்து வளர்த்துவிட்டதும் பண், பாடல், ஆடல், சித்திரம், சிற்பம் எல்லாம் ஒருங்கே அமைந்ததும் ஆடற்கலையாகிய நமது பழம் பெரும் பரத நாட்டியக் கலையாகும்

## உலகெலாம் பரவ

இத்தகைய பெருமைகள் வாய்ந்த நமது தெய்வீகக் கலைகள் அனைத்தையும், நமது முன்னோர்கள் பல ஆயிர வருடங்களாகத் தேவாலயங்களில் தெய்வ வழிபாட்டிற்கான ஆகம விதிகளையும் வகுத்துப் போற்றி வளர்த்து வந்திருக்கிறார்கள். தற்காலம் தென்னாட்டில் உள்ள தேவாலயங்களில், எல்லாக் கலைகளுக்கும் தாய்க் கலையாகிய ஆடற்கலையை ஆடக்கூடாது என்று இருக்கும் தற்காலச் சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டுமென அரசி னரைப் பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்."

# பண் ஆராய்ச்சி பன்னிரண்டாம் மாநாடு

## தொடக்கவுரை

*25-12-61 இல் நடைபெற்ற, தமிழிசைச் சங்கத்தின் பண் ஆராய்ச்சி பன்னிரண்டாம் மாநாட்டில், சென்னை மாநில இந்து அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையர்* **திரு. எம் எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்கள்** *ஆற்றிய தொடக்கவுரையின்* **சுருக்கம்** *வருமாறு:*

"இசை என்பது ஒவ்வொரு நாட்டிலும் உண்டு. அந்த அந்த நாட்டின் தட்ப வெப்ப நிலைகளுக்கும் மக்களின் மன நிலைக்கும் ஏற்ற முறையில் வெவ்வேறாக இசை அமைந்திருக்கிறது. மகிழ்ச்சியிலும் வருத்தத்திலும் விளையாட்டிலும் கடவுள் வழிபாட்டிலும் பிற நிகழ்ச்சிகளிலும் இசையைப் பயன்படுத்துகின்றனர். நம் தமிழ் நாட்டில் மிகப் பழங்காலந் தொட்டே இசை வழங்கி வந்திருக்கிறது என்பதைத் தொல்காப்பியம் முதலிய பழைய நூல்களில் இசைபற்றிய குறிப்புக்கள் காணப்படுதல் கொண்டு அறிகின்றோம். தமிழ்மொழியே இயல் இசை நாடகம் என்ற மூன்று பெரும் பிரிவுகளாக அமைந்து இருக்கின்றது. அம்மூன்றும் மனம் மொழி மெய் என்னும் முக்கரணங்களைப்போல் ஒன்றற்கொன்று தொடர்புடைத்தாய் இருக்கின்றன. "சங்கத் தமிழ் மூன்றும் தா" என்பது ஔவையின் வாக்கு. பரிபாடல் என்ற சங்க இலக்கியப் பாடல்கள் எல்லாம் பண்முறையில் பாடப்பட்டு வந்தன என்பதை ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் அந்தந்தப் பாடலுக்குரிய பண்ணின் பெயர் குறிக்கப்பட்டிருப்பது கொண்டு அறியலாம். அவற்றில் சில பாடல்களுக்கு அவற்றை இயற்றியவர்களே பண்ணும் வகுத்திருக்கின்றனர். அவர்கள் இயல் இசை இரண்டிலும் புலமை பெற்றவர் ஆவர். மற்றும் சில பாடல்களை இயற்றியவர் வேறாகவும் அவற்றிற்கு இசையமைத்தவர் வேறாகவும் காணப்படுகின்றனர். எனவே இயற்றமிழில் உள்ளவர்கள் பாட்டு இயற்றுதலும் இசைத்தமிழ்ப் புலவர்கள் அதற்கு இசையமைத்தலும் தொன்று தொட்டுள்ள மரபு என்பதும் தெரிகின்றன.

திவ்யப்பிரபந்தத்தின் பழைய பதிப்புக்களில் பண்கள் குறிக்கப்பட்டிருந்தன. புதிய பதிப்புக்களில் பண்கள் குறிக்கப் படாமைக்குக் காரணம் தெரியவில்லை. பழைய பண் முறைப் படி திவ்வியப்பிரபந்தப்பாசுரங்களைப் பாடுவோரும் அருகி விட்டனர்.

தேவாரப் பதிகங்கள் பண்ணோடு இயைத்துப் பாடப் பெறுவன என்றும், அதனால் தமிழ் மொழி வளம் பெற்றுப் புதிய முறையில் வளர்ச்சி யுற்றது என்றும் தெரிகின்றன. கி. பி. 9 ஆம் நூற்றாண்டில் அவதரித்த சுந்தர மூர்த்தி நாயனார் "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்" என்று திருஞானசம்பந்தரைக் குறித்துப் பாடியிருக்கின்றார். சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு தேவாரப் பதிகங்களும் அவற்றைப்பாடும் முறைகளும் மறைந்து போயின. 11 ஆம் நூற்றாண்டளவில் தோன்றிய முதல் இராசராச சோழன் தேவாரத் திருமுறைகளைத் தேடித் தொகுத்து திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் தோன்றிய ஓர் அம்மையாரைக் கொண்டு பழைய பண் முறைகளை வகுத்தான் என்றும், அத்தேவாரத் திருமுறைகளைத் திருக்கோயில்களில் ஓதி வருவதற்குத் தக்கவர்களை நியமித்து நிபந்தங்கள் வழங்கினான் என்றும் கல்வெட்டுக்களாலும் வரலாற்று நூல்களாலும் அறிகின்றோம். மேலும் தேவாரம் கற்பிப்பாருக்குத் "தமிழ் விரகர்" என்றும், திருமுறை ஓதும் மண்டபத்திற்குத் "திருக்கைக் கோட்டி மண்டபம்" என்றும் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாகத் "தேவார நாயகம்" என்ற அரசாங்க அதிகாரியின் மேற்பார்வையில் இந்தத் துறை ஒப்புவிக்கப்பட்டிருந்தது என்பதை நோக்க அரசாங்கம் திருமுறைகளுக்கு எவ்வளவு ஏற்றம் கொடுத்திருந்தது என்பதை அறிகிறோம்.

இக்காலத்தில் வழங்கிவரும் இசைகளாகிய இராகங்கள் எல்லாம் பழைய பண் முறைகளே யாகும் என்றும், பெயர்கள் மட்டும் மாற்றப்பெற்றிருக்கின்றன என்றும் பண்ணாராய்ச்சியில் வல்லவர்கள் எடுத்துக்காட்டியிருக்கின்றனர். இவற்றின் உண்மைகளை ஆராய்ந்து கண்டு உலகிற்கு எடுத்துத் காட்ட வேண்டியது இங்குக் கூடியுள்ள ஓதுவா மூர்த்திகள் முதலானோர் பொறுப்பாகும்.

எங்களுடைய அறநிலையத் துறையில் ஒல்லும் வகையில் செயல் புரிந்து வருகிறோம். நூற்றுக் கணக்கான கோயில்களில் திருமுறைகளைப் பாதுகாக்கும் வகையில் திருமுறைக் கோயில்கள் வைத்திருக்கிறோம்."

## தலைமையுரை

பண் ஆராய்ச்சி பன்னிரண்டாம் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய திரு. வழுவூர் பா. இராமையா பிள்ளையவர்கள் பண்முறையின் பழமை பற்றியும், பண்டை இசைக் கருவிகள் பற்றியும் அரியதொரு சொற்பொழிவாற்றினர். அதன் சுருக்கம் வருமாறு:

**பண்முறையின் பழமை**

ஏழாம் நூற்ருண்டில் இருந்து ஒன்பதாம் நூற்ருண்டுவரையுள்ள காலத்தில் தேவாரம் இயற்றப்பட்டது. அதற்குப் பல நூற்ருண்டுகள் முன்னரே தமிழ்நாட்டில் பண்முறை விளங்கி வந்தது என்பதற்குச் சான்றுகள் பலவுள. சங்க நூல்களாகிய பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, புறநானூறு முதலியவைகளில் பண் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. இன்ன பண் இன்ன காலத்திற் குரியது என்ற கட்டுப் பாடும் இருந்த தென்ருல் அது எவ்வளவு வளர்ச்சி யுற்றிருக்க வேண்டும் என்பதை எளிதில் உய்த்துணரலாம். தொல்காப்பியத்தில் இன்ன நிலத்திற்குரிய பண் இது என்றெல்லாம் இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. பரிபாடலி லுள்ள பாடல்கள், 'பாலையாழ்', 'நோதிறம்', 'காந்தாரம்' ஆகிய பண்களில் பாடப்பட்டன என்ற குறிப்புக்கள் கிடைக்கின்றன. சிலப்பதிகாரம் இசைத் தமிழ்க் கருவூலம் எனலாம். இதன் உரையாசிரியர்களாகிய "அரும்பதவுரைகாரரும்", "அடியார்க்கு நல்லாரும்", கொடுத்துள்ள உரைமட்டும் இல்லாவிட்டால் பண்டைய இசைத் தமிழ் இலக்கணத்தையே நாம் இழந்திருப் போம். மறைந்துபோன பல இசைத் தமிழ் நூல்களிலிருந்து இவர்கள் தந்துள்ள மேற்கோட் செய்யுட்கள் தமிழிசை ஆராய்ச் சிக்குக் கண்கள் எனலாம். 'சிகண்டியார்' இயற்றிய இசை நுணுக்கம் "அறிவனுர்" இயற்றிய 'பஞ்சமரபு' ஆகிய நூற்செய் யுட்கள் சிலப்பதிகார உரையின்கண் மேற்கோளாகக் கொடுக்கப் பட்டுள்ளன.

பண்டை இசைக் கருவிகள்

ஒரு நாட்டின் இசை வளர்ச்சியை உணரவேண்டுமானல் அந்நாட்டின் இசைக் கருவிகளையே அளவுகோலாகக் கொள்வர் இசையாராய்ச்சி வல்லுநர். தமிழகம் இசைக் கருவிகளின் தாயகம் என்று பெரியோர்கள் கூறுவர். சங்க நூல்களில் இக் கருவிகள் பற்றிய குறிப்புக்கள் ஏராளமாக உள்ளன என்று அறி கிறோம்.

யாழ்

நரம்புக் கருவிகளுக்கெல்லாம் முதன்மையான 'யாழ்' மிகப் பழமையான சிற்பங்களில் காணப்படுகிறது. குப்த அரசனுகிய 'சமுத்திர குப்தன்' நாணயத்தில் யாழின் வடிவம் உள்ளது. திருக்குறளில் இரண்டு பாக்களில் யாழ் பற்றிக் குறிப்பிடப்படு கின்றது சிலப்பதிகாரத்தில் மாதவியின் நாட்டியத்தின்போது யாழ் வாசிக்கப்பட்டதாக அறிகின்றோம். கோவலன், கண்ண கியை நோக்கி "யாழிடைப் பிறவா இசையே என்கோ" என்று

போற்றுகின்றான். மேலும் கோவலனும், மாதவியும் யாழை வாசித்துக் கொண்டே கானல்வரிப் பாடல்களைப் பாடினர். தேவாரத்தில் இறைவனே யாழ் வாசிப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

"தங்கையில் யாழும் வைத்தார்"

என்றார் அப்பர்.

**வீணை**

சிலப்பதிகாரத்தில் இரண்டிடங்களில் வீணை குறிப்பிடப்படு கின்றது. தேவாரத்தில் வீணை பற்றிய பல குறிப்புக்கள் கிடைக் கின்றன.

**குழல்**

குழல் மிகப் பழமையானதோர் கருவி என்பதில் யாதொரு ஐயமுமில்லை. சங்க நூல்களில் குழல் விரிவாகப் பேசப்படுகின்றது. முல்லை நிலக் கடவுளாகிய திருமால் உகந்து வாசிப்பது குழலே. சிலப்பதிகாரத்தில் இசைக் கருவிகளுக்கு எல்லாம் முதலில் குழலே வாசிக்கப்பட்டதாக அறிகின்றோம்.

" குழல் வழி நின்றது யாழே "

அடியார்க்கு நல்லார் உரையில் குழலின் இலக்கணம் மிகவும் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. குழலின் நீளம், பருமன், துளைகள் இடும் முறை, வாசிக்கும் முறை முதலிய எல்லாம் விளக்கமாக உள்ளன. 'கொன்றைக் குழல்', 'ஆம்பற் குழல்', 'முல்லைக்குழல்' ஆகிய மூன்று வகைக் குழல்கள் 'ஆய்ச்சியர் குரவையில்' உள்ளன.

**மத்தளம்**

இது 'தண்ணுமை' எனவும், 'முருடு' எனவும் பலவாறு வழங்கிவந்தது.

கொடு கொட்டி, தாளம், தக்கை, கொக்கரை, மொந்தை, கிண்ணரம், குடமுழவு முதலிய பல இசைக் கருவிகள் தேவாரத் தில் குறிப்பிடப்படுகின்றன.

இடைக் காலத்தில் ஏற்பட்ட ஆட்சி மாறுதல்களினாலும் அன்னிய மொழியின் மோகத்தாலும் நம் தமிழ்ப் பெருங்கலை கள் ஒடுங்கிவரலானது. அதிலும் நம் தமிழ் இசை கர்நாடக சங்கீதமாக மாறி வழக்கில் வந்துவிட்டது. தமிழ் இசை வழக் கில் இருந்து நீங்கியது மன்றி அதன் பெருமையையும் எடுத்துக் கூறுவாரின்றி ஆன்றோர்கள் வகுத்து வைத்த தமிழ் இசையின் இலக்கணமும் அழிந்துவிட இருந்த சமயத்தில் பண்டைய தமிழர்

களின் உள்ள உணர்ச்சி எல்லாம் ஓர் உருவாகத் தோன்றியதோ என்றெண்ணும்படி எழுந்தருளினர் நமது ராஜா அண்ணுமலை வள்ளல் அவர்கள். இதுபோன்ற பெருமை பொருந்திய அரிய எண்ணங்கள், வாழ்க்கைச் சுழலில் சிக்கித் திணறும் மனிதர் களுக்கு எழுவதே அரிது. அதனினும் அரிது நினைத்த எண் ணத்தை, அதுவும் சிறந்த எண்ணத்தைச் செயல் படுத்துவது. இவை எல்லாவற்றிலும் அரிது, செயல் படுத்தப்பட்ட காரியம் நன்மை பொருந்திய வெற்றியுடனும், புகழுடனும் என்றென்றும் நடந்து வரும்படி பராமரிப்பது ஆகும். இம் முறையில் நமது தமிழ் இசைச் சங்கம் புகழுடன் நடைபெற்று வருகிறது. பல் லாண்டுகளுக்கு முன் வழக்கிலிருந்து மறைந்த நமது தமிழ்இசைக் கலையைப் பழைய பொலிவுடன் போற்றி வளர்ப்பதற்காகத் தமிழ் இசைச் சங்கத்தை நிறுவினர்கள். அத்தமிழ் இசையின் பழம் பெருமையையும் ஆன்ரேர் கையாண்ட முறையையும் ஆராயப் பண் ஆராய்ச்சிக் கூட்டம் ஒவ்வோர் ஆண்டும் ஏற்படுத்தித் தமிழ் இசைக்கே, ஏன்? தமிழ்ப் பெரும் கலைகளுக்கே ஒரு பெரும் பெருமையை அளித்தார் நம் வள்ளல். இதனைப் போற்றிக் காப்பதே தம் வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளார்கள், அவரின் தவப்புதல்வர்களாகிய ராஜா சர். முத்தைய செட்டியார் அவர்களும், சிதம்பரம் செட்டியார் அவர்களும். வாழ்க தமிழ்ப் பெரும் கலைகள்! வாழ்க தமிழ்க்கலை அன்பர்கள்.

---

# வடநாட்டில் தென்தமிழ்*

## (Study of Tamil in North India)

### திரு. பி. கே. சென் அவர்களின் வேண்டுகோள்

[பெயர்ப்பு: மு. ச.]

கடந்த இரு திங்களாகத் தமிழ்நாட்டினர் வங்காளத்துப் பெரும் புலவர் திரு. இரவீந்திரநாத தாகூருக்கு விழாக் கொண் டாடி வரும் பரந்த மனப்பான்மையை வங்காளியாகிய யான் கண்டு பெரிதும் வியப்புற்றேன். (சென்னை) நகரத்தின் பல் வேறிடங்களிலும், தாகூரின் நாடகங்கள் நடிக்கப்படுவதை நேரிற் கண்டேன். வங்காளமும், வடமொழியும் தமிழர்களால் மிகத் திறம்படக் கையாளப் பட்டன. அவர்களின் உண்மையான ஈடுபாட்டையும் உள்ளக்கிளர்ச்சியையும் கண்டு சொல்லமுடியாத பெருமித உணர்ச்சியைப் பெற்றேன்.

* 20-12-61 'இந்து' இதழில் வெளிவந்தது.

நமது துணைக்கண்டத்தின் இப்பகுதியில் கடந்த பத்தாண்டுக் காலமாக வாழ்ந்து வரும் யான், நம் நாட்டின் உணர்ச்சி ஒருமைப்பாட்டினைச் சிறந்தவகையில் வெளிப்படுத்திக் காட்டுவதில் தமிழ்நாடு முதன்மையாயிருக்கிறது என்று துணிந்து கூற முற்படுகிறேன். தமிழர்கள் பல்லோர் தாங்களாகவே விரும்பி இந்தியைக் கற்கின்றனர். இசைத்துறையில் தமிழ்க் குழந்தைகள் கன்னடக் கீதங்களையும் தெலுங்குக் கிருதிகளையும் கற்கின்றனர். கடந்த சில நூற்றாண்டுகளாகத் தமிழ்நாடு மராத்தி, குசராத்தி, இந்தி, உருது, வங்காளம், தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளுக்குப் புகலிடம் அளித்துவந்திருக்கிறது. காந்தியடிகள், நேத்தாஜி, இராமகிருட்டிண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், தாகூர் இன்னும் பல வடஇந்தியப் பெரியோரின் பெயர்கள் எல்லாம் இந்த மாநிலத்தின் சொந்தப் பெயர்களாகவே ஆய்விட்டன. இன்ப நாட்டொற்றுமையை உண்டாக்க இதைவிட வேறென்ன வேண்டும்?

எனவே வடநாட்டில்தான் இதுகுறித்து நிறையச் செய்ய வேண்டியிருக்கிறது என்று நான் கருதுகிறேன். அதற்காகக் கீழ்வரும் கருத்துக்களை வெளியிட விரும்புகிறேன்.

மூன்று மொழிகள், அதாவது—ஆங்கிலம், இந்தி, தமிழ் இவை மூன்றும் இந்தியப் பேரரசின் அரசாங்க மொழிகளாக அறிவிக்கப் படவேண்டும். பெரும்பாலும் எல்லா மாநிலங்களிலும் ஏற்கெனவே மும்மொழி வாய்பாடு அமுலில் இருந்து வருகிறது. எனவே அது மைய அரசுக்கும் ஏற்புடைத்தாகச் செய்வதே பொருந்துவதொன்றாகும்.

வடநாட்டில் பெரும்பான்மையோரால் பேசப்படும் மொழி இந்தி என்பதற்காகவே, அஃது ஒன்றே இந்திய அரசின் ஒரே அரசாங்கப் பொது மொழியாக ஆகிவிடாது. சோவியத்நாட்டில் வேறெம்மொழியும் வளம் பெற்றிராமையின், உருசிய மொழியொன்றே அரசாங்கப் பொதுமொழியாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் சுவிட்சர்லாந்தில் மூன்று அரசாங்கப் பொது மொழிகள் இருக்கின்றன. ஏனெனில் அவைமூன்றும் வளம் பெற்றுள்ளன. அந்நாட்டுமக்கள் எல்லோரும் 'சுவிசு' என்றே தங்களையழைத்துக்கொள்வதில் பெருமைப் படுகின்றனர்; உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் மதிக்கப்படுகின்றனர். மொழிச் சிக்கலைப் பொறுத்த வரை அந்நாடே நாம் பின்பற்றுதற்குரிய சிறப்பைப் பெற்றிருக்கிறது.

மேலும், வலுவில்லாத இலக்கணத்தையே பெற்றிருக்கும் இந்தியோ ஒப்புமைப்படுத்தியறியுங்கால், மிக அண்மைக்காலத்

தில் தோன்றியதொரு மொழியேயாம். ஆனால் தமிழோ இந்தியாவில் பேசப்படும் மொழிகள் எல்லாவற்றிலும் மிகப் பழமையானது. தமிழ் மிக உயர்ந்து பெருகிய இலக்கிய வளமும், நுண்ணழகுடைய ஒழுங்கான இலக்கண வரம்புமுடையது. புறநானூறு, குறள் போன்ற பழந்தமிழ் இலக்கியங்கள் இந்நாட்டின் பொதுவுடைமைகளாக யாண்டும் எல்லாரானும் கற்பதற்குரிய பெருமையுடையன.

உருசியா, அமெரிக்கா போன்ற வெளிநாடுகளில் தமிழ் ஆர்வத்துடன் கற்கப்பட்டு வருகிறது என்பதைக் கேள்விப்படுகிறேன். ஆனால் நாடு விடுதலையுற்றுப் பதினான்காண்டுகளாகியும், நம் வடநாட்டில் உள்ளவர்கள் இன்னும் இப் பெருமைவாய்ந்த மொழியைப் பற்றி அறியாதவராயிருப்பது வருந்தத் தக்கதொன்றாகும். வடநாட்டில் வாழ்நர் காலந்தாழ்த்தாது உடனே தக்கவாறு தங்கள் போக்கைமாற்றி யமைத்துக் கொள்ள வேண்டும். இந்திய நாட்டினராய நாம், சுவிசுநாட்டினரைப் போலவே நம் சொந்த மொழிகளிலேயே ஒருவருக் கொருவர் பேசும் திறல்பெறவேண்டும். எனவேதான் வடநாட்டில் உள்ளோர் குறிப்பாக வங்காளத்தினர், அரசாங்கத்தினின்றும் எவ்வகை ஊக்கத்தினையும் எதிர்பாராது உடனே தமிழைக் கற்கத் தொடங்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

இக்கருத்துடன், தென்னாட்டில் தட்சிண பாரத இந்திப் பிரச்சார சபை ஒன்று இயங்கிவருவது போலவே வடநாட்டிலும் தமிழ்ப் பிரச்சாரசபை ஒன்று தொடங்கப் பெறல் வேண்டுமென்று அண்மையில் சென்னை அமைச்சர் ஒருவர் திருச்சியில் நடந்த பொதுக்கூட்ட மொன்றில் குறிப்பிட்டது மிகவும் வரவேற்கத் தக்கது.

கடைசியாக, மேற்குறித்த கருத்துக்களைக் காலந்தாழ்த்தாது கவனமாய்க் கருதிப் பார்த்து ஆவன செய்யவேண்டுமென்று ‘நாட்டொற்றுமைக்குழு’வினை வேண்டிக்கொள்கிறேன். இது திண்ணமாக மக்கள் உள்ளத்தில் ஆழ்ந்த தேசிய உணர்ச்சியைத் தோற்றுவிக்கும்; அதுவே கடைசியில் நம் நாட்டை வலிமை மிக்கதாக்கும்.

சென்னை. பி. கே. சென்.

---

# மெய்ப்பாடும் சுவையும் ஒன்றா ?

[திரு. மு. சதாசிவம், எம். ஏ.]

தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் ஆறாவதான மெய்ப்பாட்டியலைக் கற்போருட் பலர், மெய்ப்பாடும் சுவையும் வெவ்வேறு எனத்தொல்காப்பியர் தெற்றெனக் கூறிப்போதராமையின் அவை இரண்டும் ஒன்றேயாம் என மயங்கிக்கொள்ளுகின்றனர். உலகில் காணும் மெய்ப்பாடுகள் அளவில்லாதனவாயினும், நாடகத்தின்கண்ணும், இலக்கியத்தின் கண்ணும் பெருவரவிற்றாய தலையாய மெய்ப்பாடுகள் எட்டென்றும், துணை மெய்ப்பாடுகள் முப்பத்திரண்டு என்றும் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலின் கண் வரையறுத்து விளங்க உரைத்தருளியுள்ளார். நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்ற எட்டு மெய்ப்பாடுகளும் மெய்ப்பாடுகளுள் விளங்கித் தோன்றுபவையாகும்; சிறப்புடையனவுமாகும். நகை, அழுகை முதலிய சொற்கள் மெய்ப்பாடுகளையேயன்றி, அவற்றைப் பிறப்பித்த சுவைகளையும் குறிப்பிடுதற்கு ஏற்றவாறு தமிழில் அமைந்துள்ளன. பிறமொழிகளில் மெய்ப்பாட்டிற்கும் சுவைக்கும் வெவ்வேறு சொற்கள் உள்ளன. வடமொழியில் இவற்றை முறையே பாவம், ரசம் என்ற சொற்களால் வேறுபடுத்தி உரைப்பர். ஆங்கிலத்தில் மெய்ப்பாட்டை Emotion என்றும், சுவையை Flavour அல்லது Taste என்றும் வழங்குவர்.

மெய்ப்பாட்டியலுக்கு அரியதோர் உரை வழங்கிய பேராசிரியர் மெய்ப்பாட்டிற்கும் சுவைக்குமுள்ள வேறுபாடுகளைத் தெள்ளிதின் காட்டியுள்ளார். மெய்ப்பாட்டின் சுவையை மெய்ப்பாட்டிலேயே தொல்காப்பியர் அடக்கிக் கூறியுள்ளார் என்ற நுண்மையை 'நாலிரண் டாகும் பாலுமா றுண்டே' (தொல்: ௧௧௯௬) என்ற நூற்பாவுக்கு உரை யெழுதுங்கால் பேராசிரியர் குறிப்பிடுகிறார்: "இவற்றின் (சுவைகளின்) விகாரமாகிய சத்துவங்கள் (மெய்ப்பாடுகள்) எட்டனையும் இவற்றுள் அடக்கி எட்டாக்கிக் கூறியவாறிது" என்பது. எனவே மெய்ப்பாடும், சுவையும் வெவ்வேறாய்ப் பேசப்படும் தன்மைய என்பதே பேராசிரியரின் அடிப்படைக் கருத்தாகும்.

தொல்காப்பியத்தில் கூறப்படும் 'மெய்ப்பாடு' என்ற சொல்லை விளக்கவந்த பேராசிரியர் (1) "மெய்ப்பாடென்பது பொருட்பாடு; அஃதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு

நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோராற்ருன் **வெளிப்படுதல்**" என்றும் (2) "மேலை ஒத்துக்களுட் கூறப்படும் ஒழுகலாற்றிற்கும், காட்டலாகாப் பொருள் என்றவற்றிற்கும் எல்லாம் பொதுவாகிய **மனக்குறிப்பு**" என்றும் கூறுகிருர். முதல் கூற்றில் மெய்ப்பாடு என்பது வெளிப்பாடு என்றும், இரண்டாவதில் மனக்குறிப்பு என்றும் இருவேறு பொருள் கூறுகிருர். இரண்டாவதாகக் கூறிய 'மனக்குறிப்பு' என்பதையே 'சுவை' எனக் கொள்ளவேண்டும்.

இன்னும், மெய்ப்பாடும் சுவையும் வெவ்வேருனவை என்பதைப் பேராசிரியர் உரையிலிருந்து நன்கு உணர்கிறோம். அவர் 'பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளை'யும் "சுவைப் பொருளும், சுவையுணர்வும், குறிப்பும், விறலும் என நான்காயின" என்று வேறு வேருகப் பிரிப்பதினின்றும் அறியலாம். சுவையுணர்வு என்பதற்குப் 'பொறியுணர்வு' என்றும், குறிப்பு என்பதற்கு, 'அப்பொறி யுணர்வு மனத்துட் பட்டவழி உள்ளத்து நிகழுங் குறிப்பு' (சுவை) என்றும், விறல் என்பதற்கு, 'குறிப்புக்கள் பிறந்த உள்ளத்தாற் கண்ணீர் அரும்பலும், மெய்ம் மயிர் சிலிர்த்தலும் முதலாக உடம்பின்கண் வரும் வேறுபாடாகிய சத்துவங்கள்' என்றும் பொருளுரைக்கிருர். எனவே மனக்குறிப்பு (சுவை) வேறு, சத்துவம் (மெய்ப்பாடு) வேறு என்பது தெளியக்கிடக்கிறது.

உலகத்துப் பொருள்களைக் கண்ட பொறியுணர்வுகளே (Sensory perceptions) மனக்குறிப்புக்களாய் (Toshy) மாறுகின்றமையின், இவ்விரண்டும் ஒரு புடை ஒற்றுமையுடையவையே. இதனுல்தான் பேராசிரியரும், "பொருள் பிற கண்டவழித் தோன்றிய பொறியுணர்வுகள் அவ்வச் சுவை எனப்படும்" என்று தொல்காப்பியர் மெய்ப்பாட்டையும் சுவையையும் ஒரே பெயரில் கூறிப்போந்தமைக்கு அமைதி கூறுகிருர்.

'மெய்ப்பாடு' என்ற சொல்லின் பொருள் 'மெய்யின் (உடம்பின்) கண் தோன்றுதல்' என்பதே. 'அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்,' ஆதலால் உட்கரணங்களுள் நிகழும் நிகழ்ச்சிகளை முகமும் சிறப்பாகக் கண்ணும் வெளிப்படுத்துகின்றன. இஃது ஓர் இயற்கை முறை. உள்ளத்து உணர்வுகளை முகம் மட்டுமன்றி உடம்பில் உள்ள பல உறுப்புக்களும் வெளிப்படுத்துகின்றன. அவ்வெளிப்பாடு ஒரு நியதிக்குட்பட்டு எல்லாரிடத்தும் காணப்படுவதால் அவ்வெளிப்பாடுகளை வகைப்படுத்தி இன்னின்ன உணர்ச்சிகள் இன்னின்ன மெய்ப்பாடுகளைத் தோற்றுவிப்பது இயல்பு என்று கூறியுள்ளனர் நாடகநூலாரும் இலக்கிய நூலாரும். புலனுணர்ச்சி (Sensation)

யாலும், கற்பனையுணர்ச்சி (Imagination)யாலும் ஒருபொருளைப் பற்றிய எண்ணங்களில் கிளர்ச்சி அல்லது வல்லுணர்ச்சி பெறும் போதுமனம் அதை வெளிப்படுத்திவிடுகிறது. நோய்வாய்ப்பட்டான்ஒருவன் எய்தும்துன்ப உணர்ச்சிகளை அவன் உடம்புகாட்டுவதுபோல, உள்ளத்திலுள்ள பிறவல்லுணர்ச்சிகளையும் உயிருள்ள உடம்பு, வெளிப்படுத்திவிடுகிறது. அறிவில்லாத பொருளான உடம்பு, மூளையின் ஏவலால் ஒரு கருவியாக நின்று உயிரின் இயக்கங்களை இயல்பாக வெளிப்படுத்திவிடுகின்றது. பொதுவாக, உடற்கண் திடீரெனத் தோன்றி மறையும் குறிகளையே மெய்ப்பாடுகள் என்கிறோம். உள்ளத்தே நிகழ்ச்சிகள் இன்றி மெய்ப்பாடுகள் புறத்தே புலனாவதில்லை.

மெய்ப்பாடு என்பது ஒருவகைச் சைகை மொழியே என்னலாமோவெனின், தன் விருப்பின்றி இயல்பாய்த்தோன்றி விரைவில் மறைவதே மெய்ப்பாடு என்றும், உள்ளக்கருத்தை வெளிப்படுத்துதற்காக வேண்டுமென்றே குறியீடுகளைப் பிறப்பித்தல் சைகை மொழி என்றும் அவற்றிற்குள்ள வேறுபாடுகளைக் கண்டறியலாம்.

மனிதனின் மனம் ஒவ்வொரு கணமும் ஏதாவதொரு எண்ணம் கொண்டிராமல் இருப்பதில்லை. துடிப்பாற்றலுடைய எண்ணங்களை உணர்ச்சிகள் எனலாம். இந்த உணர்ச்சிகள் புறத்தே வெளிப்படும்போது மெய்ப்பாடு என்ற பெயரைப் பெறுகின்றன. இவை மனத்தினுள் தோற்றுவிக்கும் கருத்துக்குச் சுவை என்று பெயர். எனவே மெய்ப்பாடும் சுவையும் ஒரே மூலத்திலிருந்து பிறந்தவை. ஆனால் அவை தோன்றுமிடங்களிலும், பயனிலும் வேறுபாடுகளைப் பெற்றுவிடுகின்றன. மெய்ப்பாடு புறத்தில் தோன்றுவது, சுவை அகத்தில் தோன்றுவது என்பதே முதன்மையான வேறுபாடு. மெய்ப்பாடு ஐம்பொறிகள் வாயிலாகவும் அறியப்படும். சுவை அகத்தே மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற கரணங்களைப் பற்றுவது. ஒருவகை மெய்ப்பாடுகள் பெரும்பாலும் குறிப்பிட்ட ஒரு சுவையை உணர்த்துகின்றன. எடுத்துக் காட்டாக, பற்களை நெறுநெறுவென்று கடித்தலும், உதட்டைக் கடித்தலும், கண் சிவத்தலும், மீசை (இருந்தால்) துடித்தலும் சினம் என்ற சுவையைக் காட்டும் மெய்ப்பாடுகளாம். வெகுளி அல்லது சினம் என்ற உணர்ச்சி சினச்சுவையையும், சின மெய்ப்பாடுகளையும் தோற்றுவிக்கிறது. இவ்வாறே பிற சுவைகளும் அவற்றிற்கொத்த மெய்ப்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன.

ஆனால் மெய்ப்பாடுகளைப்பற்றி நாம் மிகவும் கவனமாயிருக்க வேண்டும். ஒருவன் சிரித்துச் சிரித்துக்கொண்டே கேடு சூழ்

வான் (One can smile and smile and be a villain) என்று ஷேக்ஸ்பியர் உணர்த்தியது போல, ஒருவன் பயிற்சியால் தன் உள்ளம் எய்திய சுவைகளுக்கு மாறான மெய்ப்பாடுகளைத் தோற்றுவித்தலும் ஒல்லுவதே. 'உதட்டிலே சிரிப்பும் உள்ளத்திலே நஞ்சும்' கொண்டாரிடத்து உண்மையான மெய்ப்பாடுகள் தோன்றுதல் இல்லை. மெய்ப்பொருள் நாயனாரைக் கொல்லவந்த முத்தநாதனின் மெய்ப்பாடுகள் உண்மையானவையல்ல. அவன் தன் மனத்தில் போலிச்சுவையைத் தோற்றுவித்துக்கொண்டு நடிப்பின் திறமையால் போலிமெய்ப்பாடுகளைத் தோற்றுவித்தான்.

நடிப்புக்கலை தோற்றுவிக்கும் போலி மெய்ப்பாடுகள் காண்பாரிடத்தே ஒருவகையான இலக்கியச் சுவையை, இலக்கிய இன்பத்தைத் தோற்றுவிக்கின்றன. இங்கும் ஓர் ஒழுங்குண்டு. அந்த ஒழுங்குதான் இலக்கிய மரபு எனப்படுகிறது. அதாவது கண்ணீர் விடுதல் என்பது உள்ளத்து அன்பை அல்லது இரக்கத்தைக் காட்டும் ஒரு மெய்ப்பாடு என்று கொள்ளுதல் போன்றது. திரைப்பட நடிகர்கள் 'கிளிசரினா'ல் கண்ணீர் வரவழைத்துக் கொண்டாலும், அஃது அவர்கள் உள்ளத்து நெகிழ்வால் பிறந்ததே என்று படம்பார்ப்பவர்கள் மனத்தில் எண்ணிக் கொள்ளவேண்டும். அப்போதுதான் நாடகச் சுவையின் பயனைப் பெற்றவர்களாவார்கள். நடிகனின் உண்மை நிலையை மறந்து நடிப்பின் போக்கில் தம்மை ஒன்று படுத்திக் கொள்வோரே நடிப்புக் கலை தரும் இன்பத்தில் திளைத்தவராவர்.

நாடகங்களிலும், இலக்கியத்திலும் வரும் பாத்திரங்கள் ஒரு வரையறை அல்லது ஒழுங்கு அல்லது மரபுக்குட்பட்டவாறு மெய்ப்பாடுகளைத் தோற்றுவிக்கும்போது அவை எவ்வகைச் சுவைக்குரியன என்பதை உணர்ந்து கலையின்பம் பெறுகிறோம். நாடகத்தில் அல்லது திரைப்படத்தில் மெய்ப்பாடுகள் விளங்கித் தோன்றுவதை நாம் புறக்கண்ணால் காண்கிறோம். இலக்கியத்தில் வரும் பாத்திரங்கள் தோற்றுவிக்கும் மெய்ப்பாடுகளை நாம் அகக் கண்ணால் அல்லது கற்பனைக் கண்ணால்தான் காணமுடியும்.

நாடகப்பாத்திரங்கள் தோற்றுவிக்கும் மெய்ப்பாடுகளை நாம் இருவகையாகப் பார்க்கமுடியும். ஒத்துணர்வுடன் நடிகன் செய்வன யாவும் உண்மை நிகழ்ச்சிகளே என எண்ணிக் கதைத் தலைவன் வருந்தும்போது பார்ப்பவரும் வருந்துதல் ஒருவகை; வெறும் கலை நோக்கோடு நடிகன் எவ்வளவு திறமையாக வலிந்து பல்வேறு மெய்ப்பாடுகளைத் தோற்றுவிக்கிறான் என்று மட்டும் கண்டு நடிகனின் உள்ளத்தோடு ஒன்றாது தனித்திருந்து கலையைச் சுவைத்தல் மற்றொரு வகை. இலக்கிய இன்பம்பெற விழைவார்

இலக்கிய ஆசிரியரின் உள்ளத்தோடு ஒன்றியிருந்து அவர் படைப்பில் கருத்தைப் பறிகொடுத்து அவர் தம் பாத்திரத் துக்குக் கொடுக்க விரும்பிய மெய்ப்பாடுகளைப் படிப்பவரும் காண வேண்டும். இதுவே உண்மையாக இலக்கியந் துய்த்த லாகும். இலக்கியச் சுவைகளைப் பெறாமல் இலக்கியத்தை ஆராயத் துணிதல் வேண்டத்தக்க தன்று. வெறுங் கலைக்கண்ணோடு நாடகத்தைப் பார்க்கும்போது நடிகையின் (தலைவியின்) அழுகை மெய்ப்பாடுகளால் நமக்கும் அழுகைச் சுவை தோன்றுவதில்லை. நடிகையைப் பாராட்டும் கலைச்சுவையே பிறக்கிறது. நடிகர்களின் மெய்ப்பாடுகளை எல்லாம் பார்ப்பவரும் அப்படியே எய்துவதில்லை யாகலின், மெய்ப்பாடு பிறரிடத்துத் தனக்குரிய சுவையை, அதாவது தான் பிறத்தற்குக் காரணமான அதே சுவையைப் பிறரி டத்தும் தோற்றுவிப்பதில்லை எனக்கூறலாம். இதிலிருந்து, ஒரு சுவையிலிருந்து பிறக்கும் மெய்ப்பாடு பிறிதொரு சுவையை மற்ற வரிடத்துத் தோற்றுவிக்கும் பெற்றியது என்பதை உணரலாம்.

மெய்ப்பாடின்றியும் சுவை பிறப்பதுண்டு: சாந்தச் சுவை மெய்ப்பாடில்லாத ஒரு சுவையாகும். ஆனால் சுவையின்றி (உண்மையான அல்லது நடிப்பான மனக்குறிப்பின்றி) மெய்ப்பாடு பிறவாது. இங்ஙனம் சுவைக்கும் மெய்ப்பாட்டிற்குமுள்ள நுண் வேறுபாடுகளையறிதல் திறனாய்வாளர்க்கு இன்றியமையாதது.

---

## உணர்வாய் !

[நாஞ்சில், திரு, கா. கணபதி]

பொன்னும் பொருளும் மிகவுண்டு
பொலிவும் அருளும் தேக்குண்டு
முன்னைத் தவத்தால் முருகனருள்
மூழ்கும் களிப்பில் இன்புண்டு
கன்னல் தமிழில் கற்கண்டு
கனியும் மொழிவே றெதுவுண்டு ?
உன்னில் உலகில் தமிழ்மொழியே
உணர்வு தருமென் றுணர்வாயே !

---

# தமிழ் எழுத்தாளர் ஒன்பதாவது மாநாடு

தமிழ் எழுத்தாளர் ஒன்பதாவது மாநாடு 30-12-61இல் தியாகராய நகர் வாணி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. மாநாட்டிற்குப், புலவர் திரு. அன்பு கணபதி தலைமை தாங்கினார். 'முரசொலி' மாறன் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. கி. வா. சகந்நாதன் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

பின்னர் 'சென்ற பத்தாண்டுகளில் தமிழ் வளர்ச்சி' என்னும் பொருள் பற்றிப் பேராசிரியர், அ. மு. பரமசிவானந்தம் எம். ஏ., எம். லிட். அவர்கள் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. திரு. க. அன்பழகன் எம். ஏ., எம். எல். ஏ. அவர்கள் கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். அக் கருத்தரங்கில், 'பத்திரிகைகள்' என்னும் பொருள் பற்றி திரு.கே. ராமநாதன் அவர்களும் 'பல்கலைக் கழகங்கள்' என்பது பற்றி திரு. ந சஞ்சீவி, எம். ஏ. அவர்களும், 'திரைப்படம்' என்பது பற்றித் திரு. அகிலன் அவர்களும், 'வானொலி' என்பது பற்றிக் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களும், 'பதிப்பகம்' என்னும் பொருள்பற்றி 'திரு. வா. சுப்பையா பிள்ளை அவர்களும், 'மேடைப் பேச்சும் எழுத்தும்' என்பது பற்றி டாக்டர் எஸ். விஜயலட்சுமி எம். ஏ., அவர்களும், 'நாடகம்' என்பது பற்றித் திரு. டி. கே. சண்முகம் அவர்களும், அரிய கருத்துரைகள் வழங்கினர். பிற்பகலில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. டாக்டர் அ. சிதம்பரநாதன், எம். ஏ., எம். எல். சி, அவர்கள் தமிழுக்குச் சிறந்த தொண்டாற்றிய மயிலை. சீனி வேங்கடசாமி, பரலி சு. நெல்லையப்பர் ஆகியோர்க்குக் கேடயங்கள் வழங்கிச் சிறப்புச் செய்தார்.

முதுபெரும் புலவர் மயிலை சிவமுத்து, பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை எம். ஏ., எல் டி. ஆகியோர் கேடயம் பெற்ற எழுத்தாளர்களைப் பாராட்டிப் பேசினர். இறுதியில் அறிஞர் சி. என். அண்ணாதுரை எம். ஏ., எம். எல். ஏ. அவர்கள் அரியதொரு சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார். பொதுச் செயலாளர் திரு. ம. இளஞ்செழியன் நன்றி கூறினார்.

மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களின் சுருக்கம் :

1. தேவநாகரி எழுத்தைத் திணிக்கும் முயற்சியை இம் மாநாடு கண்டிக்கிறது.

2. சாகித்ய அகாடமி சிறந்த நூல்களுக்குக் கொடுக்கும் பரிசைக் கடந்த சில ஆண்டுகளாகத் தமிழுக்கு வழங்காதிருப்பதற்கு வருத்தம் தெரிவிக்கிறது.

3. தமிழ் நாட்டு வானொலிகளில் நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகள், நாடகங்கள் வர்ணனை நிகழ்ச்சிகள் ஆகியவற்றுக்குத் தரப்படும் ஊதியத்தை இரட்டிப்பாக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறது.

---

# பஞ்சமரபு

[ வித்துவான், திரு. வே, ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் ]

(செல்வி சிலம்பு ௩௫, பால் ௧௨, ௫௬௫ ஆம் பக்கத் தொடர்ச்சி)

## இசைமரபு

**ஈரம்புக் கருவி - யாழ்.**

"பேரியாழ் பின்னு மகரஞ் சகோடமுடன்
சீர்பொலி செங்கோடு செப்பினரா—ஞர்பொலிந்த
மன்ன திருமாற வண்கூடற் கோமானே
யின்ன முளவே சில."

[ என் - னின். ] இசைக்குப் பிறப்பிடமாய யாழ்க் கருவிகளை யுணர்த்துதல் நுதலிற்று. அவை பேரியாழ் மகரயாழ் சகோடயாழ் செங்கோட்டியாழ் எனப் பெரும்பான்மை நான்கு வகைப்படும். சிறுபான்மை யாழ் வருவனவுமுள வென்றவாறு.

1. இவ்வெண்பா சிலம்பு அரங்கேற்று காதை யுரையில் அடியார்க்கு நல்லாரால் மேற்கோள் காட்டப் பெற்றது. இன்ன முளவே சில வென்றதனல் வில்யாழ் நாரதயாழ் கீசகயாழ் ஆயிரப்பேரியாழ் முதலியனவும் கொள்க.

"வில்யா ழிசைக்கும் விரலெறி குறிஞ்சிப்
பல்காற் பறவை கிளைசெத் தோர்க்கும்"

—பெரும்பாண் ஆற்றுப்படை

"ஆரியப் பதங்கொளுரதப் பேரியாழ்" —கல்லாடம்

"கீசகப் பேரியாழ் கிளையுடன் முரல" —கல்லாடம்

"புலமக ளாளர்புரி நரப்பாயிரம்
வலிபெறத் தொடுத்த வாக்கமை பேரியாழ்"

—கொங்குவேள் மாக்கதை

ஆயிரப் பேரியாழ் ஆதியாழெனப்பெயர் பெறும். "ஆயிரம் நரம்பிற் றாதியாழாகும்." என்பது பிங்கலந்தை. இவ்வெண்பாவிற் கூறிய நால்வகை யாழ்களும் "பெருங்களி றடக்கிய பெரும் பேரியாழ்" "மகரயாழின் வான் கோடு தழீஇ" "ஈரேழ் சகடமு மிடைநிலைப் பாலையும் செந்திறம் புரிந்த செங்கோட்டியாழில்" என முறையே கொங்குவேள் மாக்கதை, மணிமேகலை, சிலப்பதிகாரம் என்னும் பழைய விலக்கியங்களுள் வழங்குதல் காண்க.

"ஒன்று மிருபதும்[1] ஒன்பதும் பத்துடனே
நின்ற பதிணன்கும் பின்னேழும்—குன்றாத
நால்வகை யாழிற்கு நன்னரம்பு சொன்முறையே
மேல்வகை நூ லோதும் விதி."

[ என் - னின். ] நால்வகை யாழிற்கு நரம்புகொள்ளு மிடத்துப் பேரியாழிற்கு இருபத்தொன்றும் மகரயாழிற்குப் பத்தொன்பதும் சகோடயாழிற்குப் பதிணன்கும் செங்கோட்டி யாழினுக்கு ஏழுங்கொள்க.

2. இதுவும் அரங்கேற்று காதையுரையில் மேற்கோள் காட்டப்பெற்றது. ஏழுமேற்பத்துடனே என்பது வேறு பாடம்.

"சொல்லிய கொன்றை கருங்காலி மென்முருக்கு
நல்ல குமிழே தணக்குடனே—மெல்லியலாய்
உத்தம மான மரங்க ளிவை யென்றார்
[1]வித்தகமா மானே விதி."

[ என் - னின். ] யாழுக்குரிய மரங்களை யுணர்த்திற்று. இவற்றுள் கோட்டுக்குமரங் கொன்றையும் கருங்காலியும் பத்தர்க்கு மரங் குமிழ் தணக்கு முருக்குமா மெனக் கொள்க.

இனிப் பேரியாழுக் கிலக்கணம் வருமாறு ;

[1]கோட்டத் தளவே பதிணெரு சாணே
பத்த லளவே யேழுசா ணுகும்.
புட்டி லளவே முச்சா ணுகும்
பொதிகை யெருத்தந் தலையே முகனே
டேகுமின்றி யியைந்த வகை கொளல்,
தந்திரி தானும்பதின் முச் சாணே
யவ்வுறு திவவே யான்றோ ரதற்குக்
கவ்வரி முண்டகங் கட்டுதல் மரபே."

திவ வாவது நரம்புகள் தோறும் பிணிக்கப் பட்டுக் கோட்டிடை விசிக்கும் வாரெனக் கொள்க. கவ்வரி முண்டக மென்பது திவவின் கடைக்கண் முடிந்த மணிமுடி என்னை ? "அவ்விசித் திவவின் கடைக், கணிபெற வகுத்த மணி முடியாகும்" என்றாராகலின்.

இனி, மகரயாழுக் கிலக்கணம் வருமாறு ;

"கோடே பத்த லாணி நரம்பே
மாடக மெனப்படும் வகையின தாமே."

---

(பாடம்) 1. வித்தகமா நூலோர் விதி.

"அவற்றுட், கோட்டத் தளவே யேழுசா ணாகும்
பத்த லளவு நாற்சா ணரையே,"

எனக் கொள்க. அல்லாத வுறுப்புக்களூ கெல்லாம் பேரியாழ் போல வமைக்கப் படுமெனக் கொள்க.

இனிச் சகோட யாழுக்கிலக்கணம் வருமாறு :

"கோட்டத் தளவே நாற்சா ணாகும்
பத்த லளவு மதுவெனக் கொள்க
அதுதான், பதுமஞ் சதுரம் வட்டணை குடனே
விதிமாண் டாடிப் புள்ளி மூலந்
தண்டே குவடே குடுமி யென்றாங்
கெண்டகு சிறப்பி னெட்டிதி னுறுப்பே."

அவற்றுள் வட்டணை யென்பது :

"திரள்வட் டுப்போ லாக்கப் பத்தல்
முகத்தி னகல மைவிர லாகும்
தலையி னகலம் பதின்விர லாகும்
தந்திரி தானே பூணில வொழிய
வந்த விருசா ணல்விர லாகும்
அந்தமில் பெருமை பெருவிர லாகும்
வந்துநிலஞ் சுருக்கும் பூணில் தானே"

"மாடக மென்பது வகுக்குங் காலைக்
கருவிளங் கோட்டினை நால்விரல் கொண்டு
திருவியல் பாலிகை வடிவாய்க் கடைந்து
சதுரமூன் றாகத் துளையிடற் குரித்தே."

"குடுப்பிக் கொட்கு மூலத்தென மொழிப
வழக்கொடு பிறவும் வருவன கொளலே."

"மூத்துடம்பு விட்ட சேதாவின் சீரை
யார்த்த கவுண் டிய னமைத்த பின்கை
கோத்தில் மொழியாளை [ழைக்] க்கோல மேற்றி
யோடு பர்க்கோ ளீரு பாருற்
றட்டுக் கொண்ட காலை ரட்டித்த
குரலாய்த் தேனும். . . . .
வட்டினுந் தீம்பாலை முடிப்பனன் யாழே."

இனிச் செங்கோட்டியாழிற் கிலக்கணம் வருமாறு :

"செங்கோட்டி யாழே செவ்விதிற் கிளப்பின்
அறுவகை யுறுப்பிற் றாகு மென்ப."

"அவைதாங், கோடே திவவே யாணிப் பத்தல்
தந்திரி கரமே நரம்போ டாறே."

எனக் கொள்க. அவற்றுட் டந்திரிகர மென்பது நரம்பு துவக்குதற்குத் தகைப்பொழிய இரு சாணல்விரல் நீளமாகக் குறுக்கிடத்திற் சேர்க்கு மைம்பத் தோருறுப்புக்களாம். என்னை?

"தந்திரி கரமே தகைப்பற விலகி
வந்த விருசா ணல்விர லாகும்"

என்றாராகலின்.

இனி யிவ்வியாழிற் குரித்தாகிய தொழிற்கை வருமாறு:

(இவ் வுரையின்கண் வந்துள்ள சூத்திரங்களிற் சில சில விடங்களில் சரியாயில்லை. இச் சூத்திரம் சிலம்பு புறஞ் - அடியார் - உரையில் சிதைந்த உருவில் அச்சிடப் பட்டிருக்கிறது.)

வன்மைபட வார்தல் வடித்த லுடனுந்தல்
தன்னி லுறழ்த லுருட்டலே—யெண்ணித்
தெருட்டலே யள்ளல் திரள்பட் டடையும்
மருட்டாது வைத்துக் கொளல்.

[என் - னின்.] தொழிற்கை யெட்டினையு முணர்த்துதல் நுதலிற்று.

"ஐந்தாங் கோலுமெட் டெழுவா யளவும்
வந்துற வளர்தல் வார்த லாகும்."

"எழுவாய் தொடங்கி யீறு காறும்
வழுவா தெறிதல் வடித்த லாகும்"

"தடவுத றள்ள லுந்த லாகும்"

"இரண்டோ டிரண்டு நரம்பு தொட்டவை
உரம்பெற வெறித லுறழ்த லாகும்"

"மிக்க வடிமுன் முடியவோர் நரம்பை
யொக்க வுருட்ட லுருட்ட லாகும்"

"அருகிய நரம்பை யமைவுறத் தொட்டுத்
திருகி விடுதல் தெருட்ட லாகும்"

"வள்ளிய சுருட்டுஞ் சேடனும் வகுத்தெடுத்
தள்ளுத றனே யள்ள லாகும்"

"முற்றிய விழிதனை முறைமையி னமையப்
பற்றி யெழுப்புதல் பட்டடை யாகும்."

எனத் தொழிற்கை யெட்டினையுங் கண்டு கொள்க. யாழிற் குரித்தாகிய கைகளெட்டும் வருமாறு.

பன்னிய பண்ணல் பரிவட் டணைதன்னோ
டன்னியா ராய்த லறைவரன்—மன்னும்
விளையாட்டுக் கையுள் செலவு குறும்போக்கு
வளையூட்டு கைமடவாய் வைப்பு.

[ என் - னின். ] யாழிற் குரித்தாகிய கைகளெட்டினையு முணர்த்துதல் நுதலிற்று[1]. அவை வருமாறு.

" எண்ணிய தான மினிதுற நரம்பைப்
பண்ணுத ருனே பண்ண லாகும்,
ஓங்கிய நரம்பை யொத்த வகையாற்
பாங்குற* விடுத்தல் பரிவட் டணையே
சேரா நரம்பைச் செவிக்குற வேவைத்
தாராய்ந் தெறித லாராய் தல்லே "

" தடவு நீதியிற் றடவல் தைவரலே
யிசையெழு முறையா லிசைய வகுத்தல்
விளையாட்டென்று வேண்டுவர் புலவர் "

" கையு ளென்பது நரம்பிடை விட்டாங்
கெய்த லெறித லென்றிசி னோரே. "

" செலவெனப் படுவது செலவறிந் தொற்றெனப்
புலவர் யாவரும் புகன்றிசி னோரே."

" எற்றிய நரம்புக ளெல்லா மிசைவாக்
குற்றமின் றியற்றுதல் குறும்போக் கென்ப."

எனக்கண்டு கொள்க.

---

1. " வார்தல் வடித்த லுந்த லுறழ்தல்
சீருட னுருட்டல் தெருட்ட லள்ளல்
ஏருடைப் பட்டடையென விசையோர் வகுத்த
வெட்டு வகையி னிசைக்கர ணத்து "
—சிலம்பு. கானல். கட்டுரை.

"பண்ணல் பரிவட்டணை யாராய்தல் தைவரல்
கண்ணிய செலவு விளையாட்டுக் கையூழ்
நண்ணிய குறும்போக் கென்று நாட்டிய
வெண்வகை யாலிசை யெழீஇ," -சிலம்பு. கானல். கட்டுரை

# [1]பொருள் வயிற் சென்றவன் வந்தான்!

(திரு. பா. பச்சையப்பன்)

வந்தனன் கண்ணவன் என்றநற் சேதி
வந்து கேட்டனை யன்றே
இந்தநற் போதினில் ஏனடி வேலை
எடுத்ததை வைத்திட்டு வாடி
கந்தலைக் கழற்றிடு கவினுடை பூண்டே
காணுதற் கெழுந்திரு தோழி
எந்தம்நற் றலைவனும் பொருள்வயிற் சென்ற
அதுமுதல் வீடிருள் அன்றே. (க)

எதிரிலத் திருப்பவட் கீதுரை செய்க
எம்குடிக் கொளிவரும் என்றே
கதுமென வெழுந்தெனக் கானவை செய்வாய்
காலினிற் சிலம்பினைப் பூண்டே
இதுபிடிக் காதவற் கதுவெனக் காகும்
எடுத்தெனக் குடுத்துக பட்டே
வதுவரர் என்றெமை வாழ்த்துவர் தலைவன்
வரும்வரை இவ்விலம் வீணே. (உ)

அடுப்பினை மூட்டுக அன்பனுக் காக
அனைத்துண வாக்குக ஏகித்
துடுப்பினிற் றுழவுக துண்ணெனச் சென்றே
துப்புர வாக்குக வீட்டை
எடுப்பதுங் கொடுப்பதும் ஈண்டெனக் காக்கி
எங்கணும் மகிழ்வினைத் தேக்கி
மடுப்பவைக் கானவை மகிழ்ந்தவற் கேந்தி
மன்னவன் வருகென வாழ்த்தே. (ங)

---

1. பதினெட்டாம் நூற்றாண்டுப்புலவன் மிக்கிளன் என்பான் ஆங்கிலத்தில் பாடிய பாட்டு இங்குத் தமிழாக்கித் தரப்படுகிறது. பரணசு என்னும் பெருங் கவிஞர் இப்பாட்டு எல்லா மொழிகளிலும் உள்ள மிக இனிய பாக்களுள் ஒன்றெனக் கூறுகிறார். இது அறிஞர் பால் கிரிவ் தொகுத்து வெளியிட்ட "பொற் புதையல்" என்னுங் கவிதைத் தொகுதியில் சேர்க்கப்பெற்றுப் பலராலும் போற்றப் படுவதாயிற்று.

# எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி ஆராய்ச்சியில் ஐயங்கள் தெளிவித்தல்

[பண்டித வித்துவான், திரு. தி. சங்குப்புலவர்]

உயர்திரு. செ. பொதுவன் அவர்கள் செந்தமிழ்ச் செல்வி சிலம்பு ௩௬, பரல் ௪, பக்கம் ௨0௫ இல் வரைந்த கட்டுரையில் ஐயங்கள் என்று கூறிய ஐந்திற்கும் தெளிவு அடியில்வருவன.

## ஐயம்

(க) தொல்காப்பியர் ஊழிறப்ப விதி கூறினரோ? ஆயின் **காரணம்** யாது?

## தெளிவு

தொல்காப்பியர் ஊழிறப்ப விதி கூறினர் என்பது மெய்ம்மையேயாம். அக்கட்டுரையில் அதற்குரிய காரணம் விளக்கமாகக் காட்டப்பட்டன. "ஒன்பது" நிலைமொழி, "பத்து" வருமொழி: இவ்விரண்டும் புணர்ந்தால் தொண்ணூறு என்றாவது ஊழா? ஒன்பது நிலைமொழி, வருமொழி நூறு : இவ்விரண்டும் புணர்ந்தால் தொள்ளாயிரம் என்றாவது ஊழா? புணர்ச்சி என்பது நிலைமொழியும் வருமொழியும் இயைந்து நிற்பதுதான். இஃது யாவரும் அறிந்ததொன்று. அங்ஙனம் இருப்ப நிலைமொழியிலும் வருமொழியிலும் உள்ள எழுத்துக்கள் ஒன்றுமின்றிப் புணர்ந்தன என விதி கூறினர் எனில், அவ்விதி ஊழிறந்ததுவா? ஊழமைந்ததுவா? இதில் ஐயத்திற்கு இடம் ஒரு சிறிதும் இன்று. அவரியற்றிய நூற்பாக்கள் இரண்டும் (ஒன்பானொகரமிசை, ஒன்பான் முதனிலை) சான்றாக நிற்கின்றன. கண்டு தெளிக.

காரணம் யாது என்ற ஐயத்திற்கு விளக்கம் காட்டுதல் அரிது. அவ்வாசிரியர் மீண்டும் உலகிற்றோன்றி விளக்கின் விளங்கும். இவ்வுலகில் அவர் கருத்தறிந்து விளக்குவாரொருவரிருப்பரெனக் கருதுதற்கு இடமின்று. யாமும் விளக்கவல்லேமல்லேம். விளக்குவாருளராயின் அவர் வாயிலாகக் கேட்டுணர்ந்து தெளிக.

(உ) ஒன்றில்லாப் பத்து ஒன்பது என மரூஉ மொழியாயினவாறு போல "ஒருபத்தில்லா நூறு", "ஒரு நூறில்லாஆயிரம்"

என்ற சோற்களும் மரூஉ மொழியாக வன்றே இருக்கவேண்டும்? அவ்வாறில்லாமைக்குக் காரணம் யாது?

ஒன்றில்லாப்பத்து என்பது ஒன்றிலாப்பத்து, ஒன்றில் பத்து, ஒன்றில்பது, ஒன்பது என நாளடைவிற் குறைத்து வழங்குவதற்குத் தக்கதாயிருந்தது. குறைத்து வழங்கினர் போலும். நிலைமொழியில் "ஒன்" என்பதும் வருமொழியில் "பது" என்பதும் கண்டு இம்மொழி இவ்வாறு தான் மரூஉ வாய் நிற்கின்றது எனக்கண்டோம். ஒன்றில்லாப் பத்து, ஒன்பது ஆயதுபோல ஒருபத்தில்லாநூறு, ஒரு நூறில்லா ஆயிரம், என்பவை மரூஉ மொழியாகக் குறைத்து வழங்கவழி யின்றென விடுத்தனர் போலும். வழங்குவதற்குத் தக்க மொழி யாயிருப்பின் அவை நாளடைவில் தாமே மரூஉ மொழிகளாகி விடுமன்றே? மக்கள் குறைத்து வழங்கக் கருதி ஆய்ந்து வழங்கு வனவல்ல மரூஉ மொழிகள்; இயற்கையாக நாளடைவிற் குறைந்து நிற்பனவேயாம். ஒரு பத்தில்லாநூறு, ஒரு நூறில்லா ஆயிரம், என்ற சொற்றொடர்களை எவ்வாறு குறைத்து வழங்க வியலும்? வழங்க வியலாத சொற்றொடர்களைக் குறித்து எழுந்த ஐயம் ஐயம் அன்று. ஆதலால் அவ்வையத்திற்குத் தெளிவு காட்டலரிது. ஆய்ந்து தெளிக.

(ங) தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பன புலவர் கூறிய வாங்கு தொள்ளைநூறு, தொள்ளை ஆயிரம் எனக் கோள்ளின் தொண்ணூற்றேன்பது (கூகூ, 99) தொளாயிரத்துத் தொண்ணூற் றேன்பது(கூகூகூ, 999) என்பனவும் முறையே தொளையுண்டனவ ல்லவோ? இவையும் தொட்டுண்டிருப்ப பத்தும் நூறும் குறைந்த வற்றை மட்டும் தமிழர் பொருணெறியின்றி வழங்கியிருப்பரோ?

தமிழர் பொருணெறியின்றி ஒன்றையும் வழங்கார் என்பது உறுதியாம். ஒன்று முதலிய எண்களை ஒவ்வொன்றாக எண்ணும் போது ஒன்று குறைந்தபத்தினை ஒன்றில்லாப் பத்து என எண்ணினர். அது பின்னர் நாளடைவிற் குறைந்து "ஒன்பது" என்று மரூஉ மொழியாய் வழங்கக்கண்டோம். ஒருபது இருபது எனப் பப்பத்தாக எண்ணும்போது ஒருபத்துக் குறை வுடைய நூற்றினைக் குறைத்து வழங்க வழியாய்ந்தனர். "ஒரு பத்தில்லா நூறு" என்று வழங்குவதொழிய வேறு வழியின்று எனக்கண்டனர். ஒருநூறு, இருநூறு என நூறு நூறாக எண்ணும் போது ஒரு நூறு குறைந்த ஆயிரத்தைக் குறைத்து வழங்க வழியாய்ந்தனர். "ஒரு நூறில்லா ஆயிரம்" என்று வழங்குவதொழிய வேறு வழியின்று எனக் கண்டனர். ஒன்பது போலக் குறைத்து வழங்குவதற்குத் தக்க மொழியல்ல இவை

யிரண்டும் என விடுத்தனர் போலும். ஒரு பத்தில்லா நூறு ஒரு துளையுடையது தானே "தொள்ளை நூறு" என்று சொல்லலாம் என ஆய்ந்து கூறினன் ஒருவன். ஒரு நூறில்லா ஆயிரமும் ஒரு துளையுடையது தானே என்று தொள்ளை ஆயிரம் எனக் கூறினன். இவை நாளடைவில் தொண்ணூறு எனவும், தொள்ளாயிரம் எனவும் வழங்கின எனக்கண்டோம். தொண்ணூற்றொன்பது (99கூகூ) தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது (999, கூகூகூ) இவைகள் தொளையுண்டன என்று கூறுவது எங்ஙனம் பொருந்தும்? ஒரு துளையா? இரு துளையா? பல துளையா? ஒரு துளையிருப்பதைத் துளையுடையது என்று துணிந்து கூறலாம். பல துளையிருந்தால் இத்தனை துளையுடையது என எண்ணிக் கூறல்வேண்டுமன்றோ? தொண்ணூற்றொன்பது ஒரு துளையுடையது? தொண்ணூற்றெட்டு இரு துளையுடையது: தொண்ணூற்றேழு மூன்று துளையுடையது என இவ்வாறே கீழ் இறக்கி எண்களை யெண்ணிச் சென்றால், ஒன்று என்ற எண் தொண்ணூற்றொன்பது துளையுடையதாகும் நூறு என்னும் எண்ணில். ஆயிரம் என்னும் எண்ணில் ஒன்று தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதுதுளையுடையதாம். தொள்ளை என்பதை எல்லா எண்களுக்கும் பொருத்தி வழங்கவியலுமா? ஆய்வின்றி எழுந்த ஐயம் இது. நூற்றில் ஒரு பத்துக் குறைந்த எண்ணை ஒரு தொளையுடைய தாகக்க கருதி தொள்ளைநூறு என வழங்கினர் தமிழர். ஆயிரத்தில் ஒரு நூறு குறைந்த எண்ணை ஒரு துளையுடையதாகக் கருதி தொள்ளைஆயிரம் என வழங்கினர். பலதுளையிருந்தால் இத்தனை தொளையென எண்ணி முறையுடன் வழங்குவர் தமிழர். பொருணெறியின்றி வழங்கியதாக அக் கட்டுரை கூறவில்லை. பொருணெறியின்றித் தமிழர்மொழிகளை வழங்கார் என்பதனை அக் கட்டுரை நன்கு புலப்படுத்தும். ஆய்ந்து தெளிக.

(௪) தொள்ளை நூற்றைத் தொண்ணூறு என்றும் தொள்ளை ஆயிரத்தைத் தொளாயிரம் என்றும் வழங்கினரேனின் ஒன்பதை (9, கூ) தொட்பது (தொள்ளைப்பத்து) என்று வழங்காததற்குக் காரணம் என்ன? வாய்வந்த வழியெல்லாம் மொழியை வழங்குவதோ?

ஒன்றில்லாப்பத்து ஒன்பது எனக்குறைத்து வழங்குதற்குத் தக்க சொற்றொடராயிருந்தது. அதனால் அவ்வெண்ணைத் தொட்பது என வழங்காது விடுத்தனர். ஒருபத்தில்லா நூறு, ஒரு நூறில்லாஆயிரம் ஆகிய சொற்றொடர்கள் அங்ஙனம் குறைத்து வழங்கவியலாமையால் வேறு வழியாய்ந்தனர் என அக் கட்டுரையில் விளக்கியிருப்பதால் ஈண்டு விளக்க வேண்டுவ

தின்று. வாய்வந்த வழியெல்லாம் தமிழன் முறையுடன் வழங்கினனேயன்றிப் பிழைபட வழங்கினன் எனப் பேசுதற்கிடமின்று.

(ரு) தொண்டு என்பது என்ன ?

தொண்டு என்ற மொழி ஒன்பது என்ற எண்ணைக் குறிக்கும் ஒரு மொழியாம். தொண்டு + நூறு எனவும் தொண்டு + ஆயிரம் எனவும் புணர்ப்பின் ஒன்பது நூறு, ஒன்பது ஆயிரம்; என்ற பொருளையுணர்த்தும். ஒருபத்துக் குறைந்த நூறு, ஒருநூறு குறைந்த ஆயிரம் என்ற பொருளை அவை யுணர்த்தா. ஆதலால் தொண்டு என்பதை நிலை மொழியாகக் கொள்வது பயனின்றென விடப்பட்டது. தொண்டு + நூறு தொண்ணூறு, தொண்டு + ஆயிரம் = தொள்ளாயிரம் என்ற சொற்றொடர்கள் முதலில் ஒன்பது நூறு, ஒன்பது ஆயிரம் என்ற பொருளைத்தந்து வழங்கிப் பின்னர் அவ் வழக்கழிந்து ஒரு பத்துக் குறைந்த நூற்றினையும், ஒரு நூறு குறைந்த ஆயிரத்தினையும் முறையே யுணர்த்தும் சொற்றொடராக வழங்கியிருக்கலாம் என்பதும் ஒருபுலவர் ஆராய்ச்சியாம். அதனினும் இவ் வாராய்ச்சி சிறந்த தென்பது எம் கருத்து.

இது காறும் வரைந்த விளக்கங்களால் ஐயங்கள் நீங்கித் தெளிவுறும் எனத்துணிந்தேம். பின்னர் வரைந்த "ஒன்று என்பது ஒல்கியது; இரண்டு என்பது இருமையுடையது" என்பன போன்ற எண்ணுப்பெயர் ஆராய்ச்சி முழுவதும் சிறந்த அறிஞர் ஆய்ந்து முடிவு கூறத்தகுமேயன்றி எம்போன்ற சிற்றறிவுடையார்க்கு இயலாது என்று விடுத்தேம். பேரறிஞர் கண்டு பெரிதும் ஆய்ந்து தெளிவுரை கூறுவதை எதிர் நோக்குகின்றேம். அன்றியும் "தொட்டுண் டிருப்ப" என்று வந்த சொற்றொடரின் பொருள் யாது? அதனை எவ்வாறு பிரித்துப் பொருள் கொள்வது? "தொளைபட்டிருப்ப" என்ற பொருளை அச் சொற்றொடர் தருமா? எங்கேனும் இலக்கியங்களில் இச் சொற்றொடர் வந்துள்ளதா? உயர்திரு. செ. பொதுவன் அவர்கள் புதிதாகப் படைத்து வழங்கியதுதானா? அறிஞர் ஆய்ந்து முடிவு கூறி எம் ஐயத்தை நீக்குவார்கள் எனவும் எதிர்நோக்குகின்றேம்.

# வாழ்க்கைத் துணையின் மாண்பு

[கழகப்புலவர், சித்தாந்தபண்டிதர், ப. இராமநாதபிள்ளை]

பிறப்பு இறப்புக்கள் இல்லாப் பெருங்கடவுள் விழுமிய முழுமுதல்வனும் சிவபெருமான் ஒருவனேயாவன். ஏனைத் தேவர் மூவருள்ளிட்ட யாவரும் பிறப்பு இறப்புக்கட்கு உள்ளிட்ட சிற்றுயிர்களே. கடவுள் யாண்டும் ஒருவனே. அக் கடவுளின் திருவாணை இயைந்தியக்க இயங்கும் மன்னுயிர்கள் கணக்கில்லன. இறைவன் இயல்பாகவே மல நீங்கியவன். சிற்றுயிர்கள் இயல்பாகவே மலத்துடன் தூங்குபவை. இம் மலம் புல்லுமலம் எனப்படும். இப்புல்லு மலத்தன்மையால் ஆருயிர்கட்கு அறிவு விளங்கவில்லை. உயிர்களின் அறிவு இறைவன் விளக்க விளங்கும் இயல்புடையது. அதனால் அது சிற்றறிவு எனப்படும். இறைவன் அறிவு தானே விளங்கும் தனிப்பெருந் தன்மையுடையது. உயிர்கள் அறிவுவிளக்கம் பெறாமையால் அறியாமையால் மூடப் பட்டுத் துன்புற்றிருந்தன.

அவற்றிற் கேற்பட்டுள்ள அத்துன்பத்தை நீக்கியருள இன்ப வடிவமான சிவபெருமான் திருவுள்ளங் கொண்டருளினன். திருவுள்ளங் கொள்ளுதல் கண்ணுதல் எனப்படும். அதனால் அப்பிறவாயாக்கைப் பெரியோன் '**கண்ணுதலோன்**' என்று அழைக்கப்படுகின்றனன். அவ்வுயிர்கள் மலமறைப்பாலுள்ள துன்பத்தினின்று நீங்கி நல நிறைப்பாலுள்ள இன்பத்தினை நுகருமாறு செய்வித்தருளச் சிவபெருமான் கண்ணினன். அதன் பொருட்டு அவ்வுயிர்கட்கு ஆற்றலையெழுப்பும் ஆள்வினையும், அறிவினை விளக்கும் பொறிகளும் கருவித்துணையாக அமைய வேண்டுவவாயின. அங்ஙனம் அமைய வினையினின்றும் ஆள்வினை யூக்கத்தையும், மாயையினின்றும் உடல், உறுப்பு, உலகம்,ஊண்முதலிய பொருள்களையும் படைத்தளித்தருளினன். வினையும் மாயையும் ஆகிய இவ்விரண்டும் புணர்ப்புமலம் எனப் படும்.

அழுக்கை அழுக்குடன் சேர்த்து நீக்குவதுபோல் புல்லு மலத்தையும் புணர்ப்பு மலத்துடன் கூட்டி நீக்கியருள் கின்றனன். உயிர்கள் யாண்டுந் தனித்து வாழும் தன்மையன வல்ல; சார்ந்து வாழும் தன்மைய. அவை முன் மலத்தொடு சார்ந்தும், இடையே வினைமாயை ஆகிய இனத்தொடு சார்ந்தும், பின் மாசகன்று மாறா நிறைஇன்பம் அருளும் விழுமியமுழு முதலாம் சிவபெருமான் என்னும் நலத்தொடு சார்ந்தும் வாழும் நயஞ்சார் நிலையின. இவ்வுண்மை 'ஈன்றாளுமாய்

எனக்கு எந்தையுமாய் உடன்றோன் றினராய், மூன்றாய் உலகம் படைத் துகந்தான்' (௪, ௯௫ - ௧) எனவரும் செந்தமிழ்த் திருமா மறையான் உணரலாம்.

அதனால் ஆருயிர்கள் சார்ந்து வாழ்தற்கும், உயிர்கள் பிறப் பெடுத்து வாழ்ந்து சிறப்புறுதற்கும், நிறவேறுபாடு போல் ஆண் பெண் என உடல் வேறுபாடு கொண்டு இணைந்து இன்புற்று வாழ்தற்கும் இயைந்ததாய் ஆண் பெண் ஆகிய உடல் வேறு பாட்டுப் பிறப்புக்களைப் படைத்தளித் தருளினன். பால் வேறு பாட்டிணையே மேல்நிலை எய்துதற்குத் தக்க சால்புடை யிணையாகும். ஒருயிர் பெற்றோரால் வளர்க்கப்பட்டு, ஆசானால் கற்பிக்கப்பட்டு, நண்பரால் உதவிசெய்யப்பட்டு, உழைப்பால் ஊதியங் கொள்ளப்பட்டு, மணவாழ்க்கையால் நீங்கா நிலையெய் தப்பட்டு, பெரியோரால் செந்நெறி யொழுகப்பட்டுத் திருவடிப் பேறெய்துகிறது. ஆண் பெண் இணைவிழைச்சு, ஓரறிவு முதல் ஆறறிவு ஈறாகவுள்ள எல்லாவுயிரினங்கட்கும் உண்டு. நிலைத் திணைக்கண் வெளிப்படையாகத் தெரியாது உய்த்துணரக்கிடப் பினும் ஏனை இயங்குதிணைக்கண் வெளிப்படையாகத் தெரிய அமைந்துள்ளது.

இல்லறம்புகாத் துறவு யாண்டும் இன்று. ஆருயிர்கட்குப் பலபிறப் புண்டாதலால் முற்பிறப்புக்களில் இல்லறப்பயன் றுய்த்துப் பிற்பிறப்பில் துறவற மேற்கொள்ளுதற் பொருட்டுச் சிலவுயிர்கள் பிறப்பெய்துதலுங்கூடும். இவ்வுண்மை செந்நெறி முதல்வர்கள் நால்வருள் முன்னவர்களாகிய மூவரும் இல்லறம் புகாது துறவறம் மேற்கொண்டதும், பின்னவராகிய நம்பி யாரூரர் இல்லறம் புகுந்து துறவறமுற்றதும் ஆகிய அருளிப்பாடு களானுணரலாம். நன்னெறி நான்மையின் முதன் மூன்று நிலையினர்க்கும் வாழ்க்கைத்துணை யின்றியமையாததென்ப. நன்னெறி நான்மை நிலையாவன: சீலம் (சரியை), நோன்பு (கிரியை), செறிவு (யோகம்), அறிவு (ஞானம்) என்பன. முடிந்த முடிநிலையாகிய அறிவுநிலையினர்க்கு ஏனையார்க்கு அகத்தும் புறத்தும் தோன்றாத்துணையாக நின்றருளும் சிவபெருமானே தோன்றுந்துணையாக நின்றருள்வன்.

திருத்தொண்டர் புராணத்துள் பலமெய்யடியார்கள் வாழ்க் கைத்துணையொடும் வாழ்ந்து சிவபெருமானை வழிபட்டுத் திருவடிப்பே றெய்தினர். அவருள் சீலம், நோன்பு, செறிவு என்னும் முப்பகுதிக்கும் மூன்று திருவரலாறுகள் காட்டுதும்.

"விடையவர் வீரட் டானம் விரைந்துசென் றெய்தி யென்னை
யுடையவ ரெம்மை யாளு மொருவர்தம் பண்டா ரத்தில்

அடைவுற வொடுக்கி யெல்லா மயர்த்தெழு மன்பு பொங்கச்
சடையவர் மலர்த்தாள் போற்றி யிருந்தனர் தமக்கொப் பில்லார்."
(சீலம்) —கஉ. குங்குலியக்கலயர் - கங.

" அணைய வந்துபுக் கயவந்தி மேவிய வமுதின்
துணைம லர்க்கழல் தொழுதுபூ சனைசெயத் தொடங்கி
இணைய நின்றங்கு வேண்டுவ மனைவியா ரேந்த
உணர்வின் மிக்கவ ருயர்ந்தவர்ச சனைமுறை யய்த்தார்."
(நோன்பு) —கஉ. திருநீலநக்கர் - கூ.

"தென்னாவ லூர்மன்னன் தேவர்பிரான் திருவருளால்
மின்னாருங் கொடிமருங்குற் பரவையெனு மெல்லியறன்
பொன்னாரு முலையோங்கற் புணர்குவடே சார்வாகப்
பன்னாளும் பயில்யோகம் பரம்பரையின் விரும்பினார்."
(செறிவு) —கஉ. தடுத்தாட்கொண்ட - கஅக.

அறிவுநிலையிலுள்ளார்க்கு இல்லொழுக்கம் வேண்டாமையின் திருஞான சம்பந்தப் பெருமானார் 'இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே' என அருளிச் செய்தனர். அது வருமாறு :

" மந்திர முறையா லுய்த்த வெரிவல மாக மாதர்
தந்திருக் கையைப் பற்றுந் தாமரைச் செங்கை யாளர்
இந்தவில் லொழுக்கம் வந்து சூழ்ந்ததே யிவடன் னோடும்
அந்தமில் சிவன்றாள் சேர்வன் என்னுமா தரவு பொங்க."

" மலர்பெருங் கிளையும் தொண்டர் கூட்டமு மல்கிச் சூழ
அலகின்மெய்ஞ் ஞானத்தெல்லை யடைவுறுங் குறிப்பா லங்கண்
உலகினெம் மருங்கு நீங்க வுடனணைந் தருள வேண்டிக்
குலமணம் புரிவித் தார்தங் கோயிலை நோக்கி வந்தார்."
—கஉ. சம்பந்தர் - கஉசஉ, கூ.

நட்டார் இயல்பு "அழச்சொல்லி அல்ல திடித்து வழக் கறியச்" (எகரு) செய்வித்தலென்பது செந்தமிழ்ப் பொதுமறையாம் திருக்குறளானுணர்க. இதற்கு மேலாக வாழ்க்கைத் துணையாம் மங்கையர்க்குப் பொங்குமுறை நிறுத்தலும் பங்கமிலாக் கடனாகும். அங்ஙனம் தங்கணவன்மாரை முறை நிறுத்திய மங்கையர் ஓரிருவர் வருமாறு: திருநீலகண்டக்குயவனார் திருமனையார், பரவையார், மங்கையர்க்கரசியார் முதலியோர்.

கற்பின் மேம்படு பொற்புறு மங்கையரியல்பு :

" செறிவு நிறைவுஞ் செம்மையுஞ் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பா லான." —தொல். பொருள்-உ0கூ.

" மனைவி யுயர்வுங் கிழவோன் பணிவு
நினையுங் காலைப் புலவியு ளுரிய."[1] —தொல். பொருள், உஉஎ.

" தாய்போற் கழறித் தழீஇக் கோடல்
ஆய்மனைக் கிழத்திக்கு முரித்தென மொழிப
கவவொடு மயங்கிய காலை யான." —தொல். பொருள், கஎந.

இவ்விலக்கணங்களாற் பெறப்படுவன தன்னை வாழ்க்கைத் துணையாக் கைக்கொண்ட தனிச்சார்பாம் கணவற்குத தான் துணையாக நின்று நல்வழி நடப்பிப்பது மட்டுமன்றி மனையகத்து மங்கையர்க்குத் தனியரசியாய் நின்று தாய்போல் முறை நிறுத்தலும் அவள்தன் கற்புக் கடனும் என்பதும், அம்முறையில் மனைவிக்கு உயர்வுண்டாம் என்பதும் என்க.

இவற்றிற்கு இலக்கியமாகக் காட்டுவன வருமாறு:

" துளிவளர் கண்ணீர் வாரத் தொழுதுவிண் ணப்பஞ் செய்வார்
ஒளிவளர் செய்ய பாதம் வருந்தவோ ரிரவு மாறு
தளிவரு மன்பர்க் காக வங்கொடிங் குழல்வீ ராகி
எளிவரு வீரு மானு லென்செய்கே னிசையா தென்றார்."

" நங்கைநின் தன்மைக் கேற்கு நன்மையே மொழிந்தா யென்று
மங்கையோர் பாகம் வைத்த வள்ளலார் விரைந்து போகத்
திங்கள்வா ணுதலி ளுருஞ் சென்றுபின் னிறைஞ்சி மீண்டார்
எங்களை யாளு நம்பி தூ தர்மீண் டேகுகின்றார்."
—கஉ. ஏயர்கோன், நசுசு, எ.

" சிலைமலி வாணுத லெங்கைய தாக மெனச்செழும்பூண்
மலைமலி மார்பி னுதைப்பத்தந் தான்தலை மன்னர்தில்லை
உலைமலி வேற்படை யூரனிற் கள்வரி லென்னவுன்னிக்
கலைமலி காரிகை கண்முத்த மாலை கலுழ்ந்தனவே."
—அ. திருக்கோவையார், நகஎ

மேற்குறித்தவற்றை வரும் வெண்பாக்கள் வாயிலாக நினைவு கூர்க:

வாழ்க்கைத் துணைநாடல் நல்ல வழிநிறுத்த
வாழ்க்கைப் பழியகற்ற வந்தியையும்—வாழ்க்கைமுறைக்
காதலர்கள் தம்முள் கருதற்க ஏற்றிழிவு
காதலாற் செய்வர் கழறு.

நான்மைக்கண் முப்பாலார் நாடுவர்காண் இல்வாழ்க்கை
மேன்மையறி வார்நாடல் வேறு.

கழறு - உறுதியுரை. வேறு - சிறப்பு.

# இடைச் செருகல்

[திரு. செ. வை. சண்முகம், M.A., M. Litt.,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்]

இடைச்செருகல் பற்றி ஆராய்வது பழைய நூல் ஆராய்ச்சியில் ஒருவித ஆராய்ச்சியே ஆகும். அவ்வாராய்ச்சியை முழுவதும் தவறு என்று தள்ளிவிட முடியாது.

ஒருவர் தம்முடைய கருத்துக்கு முரணாக இருக்கின்றது கருதியோ அல்லது இப்படி இருக்கவேண்டும் என்று கருதியோ சிலவற்றை இடைச்செருகல் என்று சொன்னால் அவ்வாராய்ச்சி ஐயப்படுதற்குரியதே. அவ்வாறு அல்லாமல், ஒரு நூலிலேயே முன்னுக்குப்பின் முரண்பாடு உள்ளது என்ற காரணத்தால் இடைச்செருகல் என்று கூறினால் அது பெரும்பாலும் ஒத்துக் கொள்ளத் தக்கதே. ஆயினும் முரண் எவ்வாறு நேர்ந்திருக் கலாம்? எதனால் இடைச்செருகல் என்று கருதவேண்டும் என்பனவற்றையும் ஆராய்ந்து சொல்வதே ஆராய்ச்சியாளனின் கடமையாகும்.

தமிழில் பழைய இலக்கியங்களில் இடைச்செருகலைப்பற்றி ஆராய்ந்த அளவுகூட இலக்கண நூல்களில் ஆராயவில்லை. இலக் கண உரைகள் பெரும்பான்மையும் முன்னுள்ள உரை களைத் தழுவி எழுதப்பட்டுள்ளமையால் அவற்றில் இடைச் செருகல் நேர்வதற்கு வாய்ப்பு உள்ளது.

ஒரு நூலுக்கு எழுந்த பல உரைகளை ஒப்பு நோக்கினால் பல உரைத்தொடர்கள், கருத்துக்கள், சான்றுகள் முதலிய வற்றில் பின்வந்த நூல்கள் முன் எழுந்த நூல்களை ஒட்டி அமைந் திருக்கக் காணலாம். ஆயினும் பின்வந்தோர் பல இடங்களில் புதிய கருத்துக்களையும் சான்றுகளையும் கொடுத்துள்ளமையும் சிறப்பாகக் குறிக்கத்தக்கதே. நச்சினார்க்கினியரின் எழுத்ததி கார உரையை இக்கண்கொண்டு நோக்கினால் அவ்விரு உண்மை களையும் எளிதில் உணரலாம். எனவே நச்சினார்க்கினியர் எழுத் ததிகார உரை இளம்பூரணர் எழுத்ததிகார உரையைத் தழுவித் திருத்தி எழுதப்பட்டது என்று சொல்லலாம். இது, ஏனைய உரை நூல்களுக்கும் பொருந்தும்.

நச்சினார்க்கினியர், இளம்பூரணருடன் மாறுபடும். பல இடங்களிலும் சில முரண்கள் அவர் உரையிலேயே காணப்படு கின்றன. அவற்றுள் ஒன்று:

ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி
இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி உளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே.
(எழுத்து. மொழி மரபு. ௧௨)

என்ற சூத்திர உரையாகும். இந்நூற்பாவில் எழுத்து என்பது எதைக் குறிக்கிறது என்பதில் நச்சினார்க்கினியர்க்கும் ஏனைய உரையாசிரியர்க்கும் கருத்து வேறுபாடு உள்ளது. நச்சினார்க்கினியர் எழுத்து என்பதற்கு அசை என்ற பொருள் கொண்டு "ஆ, கா, நா, ஓரெழுத்தொருமொழி; மணி, வரகு கொற்றன் ஈரெழுத்தொருமொழி; குரவு, அரவு, மூவெழுத்தொருமொழி கணவிரி நாலெழுத்தொருமொழி; அகத்தியனார் ஐயெழுத் தொருமொழி; திருச்சிற்றம்பலம் ஆறெழுத்தொருமொழி பெரும்பற்றப் புலியூர் ஏழெழுத்தொருமொழி' என்று சான்றுகள் தந்துள்ளார். அத்துடன் தொல்காப்பியரும் இக்கருத்தே உடையார் என்பதற்காகச் செய்யுளியல் நூற்பாக்களையும் காட்டி உயிரில் எழுத்துக்கள் 'எழுத்தெண்ணவும் அலகிடவும் பெறா' என்றும் கூறியுள்ளார். ஆனால்,

'அவற்றுள்
மெல்லெழுத் தியற்கை உறழினும் வரையார்
சொல்லிய தொடர்மொழி யிறுதியான'
(தொகை மரபு. ௩)

என்ற நூற்பாவின் உரையில்,

"ஓரெழுத்தொருமொழி ஈரெழுத்தொருமொழிகளுள்ளும் சில உறழ்ச்சி பெற்று முடிதல் கொள்க. பூஞெரி பூஞ்ஞெரி, நுனி, முரி; காய் ஞெரி, காய்ஞ்ஞெரி, நுனி, முரி என வரும்" என்று எழுதியுள்ளார்.

இதனால் நச்சினார்க்கினியர் ஈண்டு காய் என்பதை ஈரெழுத் தொருமொழியாகக் கொள்கிறார் என்பது தெளிவாகிறது. எனவே இவர் கருத்து முன்னுக்குப்பின் முரண் என்பதில் ஐயமில்லை.

பொதுவாக எழுத்ததிகார உரைகளை ஆராய்ந்த திரு. வேங்கடராசுலு ரெட்டியார் அவர்களும் தம்முடைய 'எழுத் ததிகார ஆராய்ச்சி' என்ற நூலில் (பக்கம் ௪௮) தொகை மரபு நூற்பா உரையையும் எடுத்துக்காட்டி 'இவற்றால் அவர் கொள்கை (ஆசிரியர் கருத்தொடு மாறுபடுதலேயன்றி) முன்பின் முரணா யிருத்தலும் காண்க' என்று எழுதியுள்ளார். திரு. P. S. சுப்பிரமணிய சாத்திரியார் தமது குறிப்புரையில் மற்றுமொரு முரண் பாட்டை எடுத்துக் காட்டியுள்ளார்.

"ஈ ரெழுத் தொருமொழியும் உயிர்த்தொடர் மொழியும்
வேற்றுமை யாயின் ஒற்றிடை யினமிகத்
தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி"

என்ற குற்றியலுகரப் புணரியல் ௬ ஆம் நூற்பாவின் உரையில் நச்சினார்க்கினியர் "யாட்டுக்கால் செவி தலைபுறம் எனவும் முயிற்றுக்கால் சினை தலை புறம் எனவும் வரும்" என்று சான்று காட்டியுள்ளார். எனவே ஈண்டு 'யாடு' என்ற சொல் நச்சினார்க்கினியரால் ஈரெழுத்தொருமொழியாகக் கருதப்பட்டது என்பது தெளிவாகிறது. எனவே இதை எடுத்துக் காட்டித் திரு. சுப்பிரமணிய சாத்திரியார் நச்சினார்க்கினியர் உரை பொருந்தாது என்று மட்டும் கூறியுள்ளார்.

முன் கூறியபடி இளம்பூரணர் உரையை எடுத்துப்பார்த்தால் தொகைமரபு மூன்றும் நூற்பாவின் உரையில் 'ஓரெழுத்தொரு மொழியுள்ளும் ஈரெழுத்தொரு மொழியுள்ளும் சில வற்றிற்கு உறழ்ச்சி முடிபு கொள்க. உ. ம். பூஞெரி, பூஞ்ஞெரி, நுனி, முரி எனவும; காய்ஞெரி, காய்ஞ்ஞெரி, நுனி, முரி எனவும் வரும்" என்று எழுதியுள்ளமை அறியலாம்.

இருவருடைய சொற்றொடர்களிலும் பெரிய மாற்றம் இல்லை; இளம்பூரணர் உரையில் 'உறழ்ச்சி முடிவு கொள்க' என்று காணப்படுவது நச்சினார்க்கினியர் உரையில் 'உறழ்ச்சி பெற்று முடிதல் கொள்க' என்றும், இளம்பூரணர் உரையில் ஓரெழுத்தொருமொழிச் சான்றும் ஈரெழுத்தொரு மொழிச் சான்றும் தனித்தனியே இருப்பது நச்சினார்க்கினியர் உரையில் சேர்ந்து காணப்படுவதும் தான் வேறுபாடு. இவற்றால் பொருள் மாற்றம் ஒன்றும் ஏற்படவும் இல்லை. ஆகவே இளம்பூரணர் உரையைப் படித்த ஒருவர் நச்சினார்க்கினியர் உரையில் எழுதி வைத்த குறிப்பு பிற்காலத்தில் நச்சினார்க்கினியர் உரையாகவே கருதப்பட்டு விட்டது. எனவே அவ்வுரைப்பகுதி இடைச் செருகல் என்று கருதலாம் என்று கொள்வதற்கும் இடம் உண்டாகின்றது. எனவே ஓர் உரைநாலிலேயே காணப்படும் முரண்கள் முன்னுள்ள உரைநூல்களோடு ஒத்திருந்தால் இடைச்செருகலாகச் சேர்ந்த பகுதி என்று கொள்வதில் தவறு நேர்ந்துவிடாது.

இல்லையெனின் வேறு ஒரு கருத்தும் நாம் இங்குக் கொள்ளலாம். அது நச்சினார்க்கினியரை மட்டும் பொறுத்தது. அவர் சிந்தாமணிக்கு இரண்டு தடவை உரை எழுதினர் என்ற செவிவழிச் செய்தி, அவருக்குத் தம்முடைய உரையைச் செம்மையாகச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தினால்

உரையைத் திருத்தும் பழக்கமுடையார் என்ற கருத்தைப் புலப்படுத்துவதாகக் கொள்ளலாம். அவ்வாறாயின் எழுத்ததிகார உரையையும் திருத்த முற்பட்டு முழுமையும் முடிக்காமல் விட்டுவிட்டாரா என்ற ஐயங்கொள்ள இடமிருக்கிறது. எனவே மொழிமரபு பன்னிரண்டாம் நூற்பாவில் உள்ள எழுத்து என்பதைப் பற்றிப் பலகாலம் ஆராய்ந்து எழுத்து என்பதற்கு வெறும் எழுத்து (letter) என்ற பொருள் பொருந்தாது என்று கண்டு எழுதது என்பது ஆண்டு அசை என்பது போன்ற பொருளில் வருவதாகக் கண்டு அந்நூற்பாவிற்கு மட்டும் உரையை மீண்டும் எழுதியிருக்கலாம் அல்லவா? அவ்வாறாயின் திருத்தாமையினால்தான் குற்றியலுகரப் புணரியலில் ஈரெழுத்தொரு மொழிக்கு 'யாடு' என்பது சான்றாகக் காட்டப்பட்டுள்ளது என்று கொள்ளலாம்.

இவ்வாறு எண்ணுவது சில ஐயங்களைப் போக்கத் துணை செய்யுமே தவிர நச்சினார்க்கினியரின் எழுத்ததிகாரம் பற்றிய கொள்கைகளை அறிந்துகொள்ள உதவாது. எனினும் நூலில் உள்ள முரண்கள் பொதுவாக எண்ணிப் பார்க்கும் ஆற்றலை வளர்க்கும்.

---

## பொங்கல் வாழ்த்து

[சித்தாந்த பண்டிதர், திரு. ப. இராமநாத பிள்ளை]

ஆதிரைநாள் தோற்றமுயி ராகும் நிலவாழ்க்கை
ஓதுந்தைப் பூசம் உலகுவப்பத்—தீதில்தைப்
பொங்கற் புதுவிழாப் போற்றி யறம்புரிவார்
பொங்குகதைப் பொங்கல் பொலிந்து.

பொங்கல் புதுப்பொருளால் யாண்டும் பொலிவுறுமால்
பொங்குவிருந் தோடு புதிதுண்க—எங்குநல்
ஈகையறம் பேணி இறையடியை வாழ்த்திநல்
ஓகையொடும் வாழ்க வுவந்து.

பண்டைத் தமிழகத்தே பாற்பொங்கல் பல்லாருங்
கண்டுவகை கொள்ளக் கடவுளருள்—கொண்டுணற்றிச்
செய்வரால் பாத்துண்டு பார்வாழ வாழ்த்துவரால்
சைவத் தனிச்சிறப்பைச் சார்ந்து.

---

# [1] குறியீட்டுச் சாத்திரமும் திருயித்து சைவ சமயங்களின் ஒருமைப்பாடும்

[வித்துவான், மாவை துரை பழநி மகாதேவன், ஆம்பூர்]

**இரு கொள்கைகள்**

பண்டைத் திராவிடர்களின் வாழ்விடம் யாது? இது பற்றிய இரு கொள்கைகள் நிலவி வருகின்றன. ஒன்று 'நாட்டுக் கொள்கை (Indigenous Theory); மற்றொன்று இலாமிதியக் கொள்கை (The Elamite Theory). நாட்டுக் கொள்கையின்படி பண்டைத் தமிழ் மக்கள் எனப்படும் திராவிடர்கள் குமரிக் கண்டம் என்றதொரு பெருநாட்டில் வதிந்தரெனவும், அப் பெரு நாடு வெவ்வேறு காலங்களில் நிகழ்ந்த சில கடல்கோள்களால் அழிந்துபட்டதெனவும் முன்னரே கூறியுள்ளோம்.[2] அக் கடல் கோள்களில் இரண்டாவதற்குப் பின், தம் நாட்டினின்று தப்ப எண்ணிய பண்டைத் தமிழ் மக்கள், ஆப்பிரிக்க நாட்டின் கீழ்க் கடற்கரையோரமாகத் தம் சிறு நாவாய்க்ளில் தப்பிப்போய் ஸ்காத்லாந்து நாட்டின் வடமுனையூராகிய எரின் வரை சென்று குடியேறினர் என்பர். "தமிழ் இந்தியா" என்னும் தம் ஆங்கில நூலில் பேராசிரியர் மு. பூரணலிங்கம் பிள்ளை அவர்கள் "தரை வழியே தப்பிச் சென்றவர்களில் முதற் கூட்டத்தார் வட இந்தியாவுக்கும், இரண்டாம் கூட்டத்தினர் பலுச்சித்தானம், ஆபுகனித்தானம், பெர்சியா, அரபியா, துருக்கி, மெசபதோமியா, ஐரோப்பியத் தென் கடற்கரைப் பகுதி ஆகியவற்றின் வழியே சென்று பரவி ஐரோப்பிய வட கடற்கரைப் பகுதி வரை சென்றனர்; மூன்றும் குழுவினர் பண்டைத் தமிழகத்தின் கீழை நாடுகளான ஆசாம், பர்மா, அதன் அயல்நாடுகள் போன்றவற்றிற்குச் சென்று முடிவாகச் சீன நாடு சென்றடைந்தனர்" என்று கூறியுள்ள சான்றால், வட, தென் ஐரோப்பியக் கடற்கரைகள் வரைக்கும் சென்றவராய பண்டைத் தமிழரே பின்னர் கெலித்தியர் (Celts) ஆதல் வேண்டும் என்பது அறியப்படுகின்றது.

பண்டைய குமரி நாட்டில் உயர்ந்து விளங்கிய மகேந்திரமலை தற்பொழுது கடற் கீழுள்ளது. ஆண்டு வசித்த தமிழ் முனிவர்கள் பண்டைத் தமிழ் மறைகளை நன்கு ஓர்ந்திருந்தனர். அவர்கள் மறை ஆரிய வேதத்தினின்றும் வேறுபட்டவை என்பதற்குப் "பண்டாய நான்மறை', என்று அவை கூறப் பெற்றமையினாலே

---

1. செல்வி சிலம்பு ௲௪, பரல் ௧௧, பக்கம் ௫௧௬ காண்க.

2. செல்வி சிலம்பு ௲௫, பரல் அ ஆகியவற்றில் வந்த கட்டுரைகளோடு தொடர்புறுத்திக் காண்க.

தெளியப்படும். அவையும் கடல்கோள்களால் அழிந்தன. அவற்றின் சிறப்பைச் செவிவழியாகத் தமிழர்தம் வழிவரு மக்களுக்கு உணர்த்தினர். அப் பண்டைய மறைக் கருத்துக்களையே பண்டைத் திராவிட முனிவர்கள் தம் நூல்களில் பெய்தனரெனவும் அவைகளே இறைவன் அருள்வாக்கு ஆகமங்களாகத் தற்பொழுது வழங்கப் பெறுகின்றன எனவும் அறிஞர் கூறுவர். சுவேதமுனிவர் பண்டாய நான்மறைச் சிறப்புச் சொற்களே பலநாடுகளுக்கும் பண்டைத் தமிழர் வழியே பரவிச் சென்றன என்று தம் ஆய்வின் முடிவாகக் கூறுகின்றார்.

இலாமிதிய கொள்கைப்படி பண்டைத் தமிழர் யூபிரேடிசு, தைக்கிரிசு என்ற இரு பேராறுகளின் இடைநிலத் (Delta)திருந்ததும், பாபிலோனியப் பேரரசின் கூறாக விளங்கியதுமான ஏலம் என்னுமிடத்திருந்தே பரவினர் என்று பெறப்படும். இக்கொள்கை உறுதிப்படத்தக்க சான்றுகள் அறிஞர் உயர்திரு D. கோபால் செட்டியார் அவர்களால் "புதுக்கோயில் புதினம்" (New Church Magazine) என்பதன் வழியே வெளியிடப் பெற்றன.

பேரறிஞர் சாடடர்ஃசீ என்பார் "திராவிடர்கள் மத்திய தரைக் கடல் நாட்டுமக்கள் போன்றிருந்தன ரெனவும், கிரீட்டின் வழி சின்ன ஆசியாப்பகுதிகளுக்கு வந்து சுமேரியர் எலாமிதியர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர் எனவும் ..........பின்னர் அவர்கள் இந்தியாவின் சிந்து நதிப்பகுதியைச் சென்றடைந்தன" ரெனவும் கூறுவர். இலாமிதியக் கொள்கை நிறுவப்படின் பண்டைமறைச் சொற்கள் ஏலம் என்னுமிடத்திலிருந்து சென்றனவாகல் வேண்டும். ஆனால் பண்டைய தமிழ் இலக்கியங்களால் நிறவப்படும் நாட்டுக்கொளகையே மேற்கொளளப்படின், தமிழரில் ஒரு சாரார் ஐரோப்பியப் பெருநிலத்திற்குச் சென்றக்கால் அவர்வழிப் பரவினவாகல் வேண்டும் அவை.

குறியீட்டுச் சாத்திரம் (Science of Correspondence)

பண்டைத் தமிழ் மறைச் சொற்களின் சிறப்பியல்புகளும், அவற்றின் அணித்தான கொள்கைகளும் குறியீட்டுச் சாத்திரவழி விளக்கிக் கூறப்பெறும். சமயக்கோட்பாட்டுக்கும் இயற்கைக்கும் இடையேயும், சமய உலகில காணப்படும் பொருள்களுக்கும் அவற்றின் நேர்ப்புறத்தே காணப்படும் இயற்கைப் பொருள்களுக்கும் இடையேயும் உள்ளனவாகிய தொடர்புகளை அறிவுறுத்தும் தன்மையது இச்சாத்திரம். பண்டைச் சமயங்கள் என முன் விளக்கம் கூறப்பெற்றவைகள்[1] யாவும் சமய எண்ணங்களின் அடிப்படையில் தோன்றியவைகளே. சமயச் சடங்குகள், வழி

1. சிலம்பு. ௩௫, பரல் அ, பக்கம் ௩௭௫ காண்க.

பாட்டு' உருவங்கள் யாவும் குறியீட்டுச் சாத்திர அடிப்படையில் அமைந்தனவாயிருந்தன. பண்டை யுலக மக்களால் நன்கு அறியப்பட்ட இக்குறியீட்டுச் சாத்திரம் இந்நாள் அழிந் தொழிந் தது எனலாம். எகிப்திய மக்களின் படக்குறியீட்டு நூலும் (Hieroglyphics), பண்டைச் சமயக்கட்டுக் கதைகளும் அவற்றின் அடிப்படையில் எழுந்தவைகளேயாம். இக்குறியீட்டுச் சாத்திர அடிப்படையில் எழுந்த பல நாட்டு உருவகங்களும், கற்பனைக் கதைகளும், ஒருசார்புக் கொள்கைகளும் (Analogy), நீதிக்கதைகளும் தம் ஒரே பிறப்பிடத்தை குறிப்பனவாம். இந்நாளில் குறியீடுகளின் உண்மைப் பொருள் அறியப்படாவிடினும் அக்குறியீடுகள் வழக்காற்றிலுள்ளமை தெற்றெனப் புலப்படும். ஒரு சமயம் சைவசித்தாந்த வித்தகர் ஒருவர் தம் மறைகள் யாவற்றையும் இழக்க நேரினும், தம்பாலுள்ள குறியீடுகளைக்கொண்டு அவற்றைத் திரும்ப அமைத்தல் கூடும் என்றார். அண்மையில் சிதம்பர வழிபாட்டைக் குறித்த விளக்கம்[1] குறியீட்டுச் சாத்திர உதவியால் தெளிவாக முற்கூறிய அறிஞர் செட்டியார் அவர்களால் கூறப்பெற்றது கோட்பாடுகளை ஒட்டிய மறைகளின் உட்பொருள் தத்துவார்த்தம் (உண்மைப் பொருள்) என வழங்கப் பெறும். இக்குறியீட்டு விளக்கம முழுக்கமுழுக்க நம் நாட்டில் உணரப் பெறுமையின் சிவபிரான் திருவிளையாடல்கள் அறுபத்து நான்கு போன்றவற்றின் உட்பொருள்கள் விளக்கம் பெற்றில சுவேத முனிரவர் விவிலிய நூலுக்கு இத்தகு உட்பொருள் விளக்கம் கூறினர். அதனால் எதிர்ப்புக்கள் நீங்கின.

**மறைச் சொற்களும் துரூயிதிசமும்**

துரூயிதிசக் கொள்கை பண்டைய கோயிற் கொள்கைவழி நிகழ்ந்த மறைச் சொற்களினின்று பெறப்பட்டதென்பதற்கு யாதொரு ஐயமுமின்று. சுவேத முனிரவர் பழைமை குறித்துக் கூறியவை துரூயித்துக்களின் பாடல்களில் காணப்படுகின்றன.

அவர்களின் மேல்வரிச் சட்டங்கள், வழிபாட்டு முறைகள், கோயிற் கொள்கைகள், சமயப் பொதுத் தத்துவம் ஆகியவை பழைய கோயிற் கொள்கைகளுடன் பொருந்தியுள்ளன. பண்டைய துரூயித்துக்கள் குறியீட்டுச் சாத்திர அறிவைப் பெற்றிருந்தனர் என அறிகின்றோம். "தாலீசன் இருக்கை" (The throne of Talieson என்ற துரூயித்துக் கவிமார்களின் பாடலொன்று குறியீட்டுச் சாத்திர நூலில் கூறப்பட்டுள்ளது. அவர்கள் வழிபாட்டுருவங்கள், சமயச் சடங்குகள், கோவில்கள் யாவும் குறியீட்டுச் சாத்திர முறையிலே அமைந்திருந்தன.

---

1. Chidambra Rahasyam Revealed (A Philosophical Treatise) By D. Gopal Chetty (1930)

துரூயித்துகளின் வழிபாடு வட்டக் கோயில்களில் நடை பெற்றன. திறந்த வெளிகளிலும், மலை, குன்றுகள் மீதும், மரங்களினடியிலும், பலிபீடங்கள் அமைந்திருந்தன. பண்டை நாள் தமிழ்மக்கள் தம் கடவுளைக் கல்லாலோ மரத்தாலோ ஆன உயர்ந்த ஒரு கம்பத்தால் குறியீடு செய்தனர். அக்கம்பங்களால் இறையிருப்பை மக்களுக்கு அறிவுறுத்தல் செய்தனர் அன்னோர். மலையுச்சிகளிலும். மரங்களினடியிலும் கடவுளர் உருவங்களை வைத்து வழிபட்டனர். பண்டும் இன்றும் முருகப்பிரான் கோயில்கள் போன்றவற்றைக் குன்று, மலைகள் உச்சியில் அமைத்துள்ளமை புலனாகும். நிழல் வளமார்ந்த பலா, ஆல் மரங்களினடையில் குற்றாலத்திலும், மூங்கில் மரத்தினடியில் திருநெல்வேலியிலும், கடம்ப மரத்தினடியில் மதுரையிலும், தில்லை நீழலில் திருச்சிற்றம்பலத்திலும் இறையுருவங்கள் அமைக்கப் பெற்றுள்ளமை கண்கூடு. மரங்களினடியில் இறைவழிபாடு நடைபெற்ற சான்றுகளால் சைவசமயமும் துரூயித்திய சமயமும் பழஞ்சமய (Ancient Church) வழிவந்தவை என நன்குணரலாகும்.

துரூயிதக் கோயில்கள், கணித வான நூல்களின் கணக்கீட்டில் அமைந்த குறியீட்டுச் சாத்திரப் பொருத்தங்கள், நிமித்தங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டெழுந்தவையென விளங்குகின்றது. தற்காலச் சமயவாதிகளாம் சகோதரர்கள் கரடுமுரடான வட்டக் கற்களைக் கோயில்களெனக் கூறின் எள்ளி நகையாடற்கூடும். கட்டட நிறுவனக் கலையை ஒட்டிய ஒப்புயர்வு காணல் துரூயிதக் கோயில்களில் இயலாததெனக் கூறலாம். இக்காலம் சிலபல சமயக் கோயில்களின் கட்டடத் திறன்பற்றி ஒருவர் புகழ்ந்து கூறிப் பாராட்டலாம். ஆயின் சமயக் குறியீட்டுத் தத்துவங்கள் அக்கோயில்களைக் காண்போரின் உள்ளங்களைக் கவர்வனவாய் அமைகுவதில்லை. துரூயிதவட்டக் கோயில்களோவெனில் கரடுமுரடாயிருப்பினும் பெரும்பாலும் இந்து சமயக் கோயில்கள் போலத் தத்துவ அடிப்படைகள் நிறைந்தவை.

சர் சாண் தானியல் என்பார் கூறுகின்றார்: "துரூயித்துகள் கண்டு அமைத்த கோயில்கள் சிறியவாயினும் பெரியவாயினும் ஒரே தன்மையுடையன. காயர் சித்தி[1] எனப் பெற்றன. காயர் எனில் இலத்தீனில் 'நகரம்' - 'கோயில்' எனப் பொருள் படும். சித்தி எனில் இலத்தீனத்தில் உடு எனப் பொருள்படும். ஆகையினால் அக்கோயில் அமைப்புப் பன்னிரு இராசிகளோடு தொடர்புடைய என ஊகிக்கப்படும். ஆக, 'காயர் சித்தி' என்னும் பெயர், பரிதி இடையிட்ட பன்னிரு இராசிகளையும் குறியா நிற்கும். தோற்றப்பாடுள்ள பரிதியுள்ளிட்ட இக்கோட்குழு,

---

1. Caer Sidi

புலனுக்கிலக்காக உயர் இறை அரசினைக் குறியா நின்றது. காயர் சித்தி எனப்படும் கோளியல்கோயில் (Celestial Sanctuary) உயர் விண்ணரசின் குறியீடாக அமைந்தது. இங்ஙனம் அமைந்த துரூயிதக் கோயில்கள் தம் குறியீட்டுக் கொள்கையால் பேர் பெற்று விளங்கின. உவேல்சு (Wales) நாட்டில் காணும் வட்டக் கோயில்கள் காயர் சித்தி, காயர் சித்தின் என்னப்படுகின்றன. அவற்றுள் ஒன்று கார்னர்வானை (Carnorwan) அடுத்த சுநோதன் (Snowdon) மலைப்பகுதியில் அமைந்த ஃகிஃவிலிகி (Gyfylchi) எனப்படும் கற்கோயிலாம்."

ஃச்டோன் ஃஎன்சு என்று துரூயிதர்கள் வழங்கிய ஃசாயிர் ஃகொர் (Choir Ghaur) பெருங் கோயில் எனப் பொருள்படும். இத்தகு கோயில்களில் மூன்று வட்டக்கற்கள் அகழியுடன்கூடி வெளிப்புறத்திலும், ஆதிதம் (Adytum) எனப்படும் கருவறை (Holy of Holies) உட்புறத்திலும் கொண்டு அமைகுவ. திருசிற்றம்பலக் கோயில்போல இக்கோயிற் கருவறையிற் காணப் பெறும் ஒவ்வொரு பகுதியிலும் சமயதத்துவ உணர்வு நிறைந்த புதைபொருள்கள் பல்கியுள்ளன. இவ் வாதிதங்களினுள் எகிப்திய, இந்து, கிரேக்கக் கோயில்கள் போலத் தூய்தன்மையார் (தூய்து + அன்மையார்) புகுதற்குரியரல்லர் நம் இந்திய நாடு ஒழிந்த ஏனைய நாடுகளில் ஒருவன் தூயவியல்பு அவன் நல்லொழுக்க வாழ்வால் மதிக்கப்படுமேயன்றி சாதிப் பிறப்பால் மட்டும் அன்று. ஆதிதம எனப்படும் துரூயிதக் கோயிற் கருவறை நீள்வட்ட (சினை) வடிவினதாக அமைந்துள்ளது. அது பற்றி, மறுபிறவி உண்டென்றும நம்பிக்கை கொண்டிருந்தனர் துரூயித்துக்கள் என்னும் உண்மை ஆராய்ச்சியால் புலப்பட்டுள்ளது. நம் சமய நூல்களிலும் குடிலை என்னும பிரணவம் தூங்கும் அரவொன்றின் வடிவில் அமைந்துள்ளது என்றும், அதனின்றே நாதம் தோன்றிற்று எனவும் கூறுவர். விந்து குண்டலினியின் மறு பெயர்.

"ஸா பிந்துரீதி மந்தாவ்யானசைவ குண்டலினி மாதா" என்றும் யோக நூல் கூறுகின்றது. சினைவடிவ அமைப்பு குண்டலினி சக்தியைக் குறிக்கும். ஃச்டோன் ஃஎன்சு என்பது குறித்துப் பல சமய உட்பொருள்கள் காணலாம் ஃகிளயின் (glain) எனப்படுவது அக்கமணி[1]. அக்கமணிக் கோவையினைத் துரூயிதக் குருக்கண்மார் தம் கழுத்தில் அணிந்தனர் எனவும் அறிகின்றோம். ஆக, பண்டைத் தமிழ்மக்கள் சமயமும், துரூயித்துகள் சமயமும் பண்டைய கோயில் வழிபாட்டுச் (Ancient Church) சமயச்சார்பானவை என முடிவு கூறலாம்.

# பால் பொங்குக!

[புலவர் 'அரசு']

வான்மழை பொழிக; மாநில மெங்கும்
மேன்முறை உழவினால் மிகவளஞ் சுரக்கும்
தாளாண் மையினர் வேளாண் மனையெலாம்
பால்பொங் குகவே; பால்பொங் குகவே;
செந்நெலுங் கரும்புஞ் சீர்பெற விளைக;
நன்னிலை வணிகம் நாடெலாம் பொலிக;
செந்தமிழ் நாடு செல்வமுஞ் சிறப்பும்
எந்த நெறியினும் இயலுறப் பொங்குக;
மனமொழி மெய்யெலாம் தூயநன் மக்கள்
கனவெலாம் நலமுற நனவிலே நிகழ்க;
நாட்டுக் கியற்றும் நற்பணி யேநம்
வீட்டுப் பணியென மெய்த்தொண் டியற்றும்
நல்லவர் பெருகி நலம்பெற வாழிய;
புல்லிய தன்னலம் பொருத உளத்தினர்
எண்ணிய எண்ணியாங் கினிதுறப் பெறுக;
செந்தமி ழகத்திலே செந்தமி ழன்னை
முந்துற அரியணை மொய்ம்புற அமர்க;
வாழிய செந்தமிழ் நாடு;
வாழிய பாரத நாடுவா ழியவே.

# செய்திகளும் குறிப்புக்களும்

## க. ஆங்கிலத்தின் இன்றியமையாமை பற்றி
### திரு. சி. பி. குப்தா கருத்து

"தற்போது இந்தியா ஒரு தன்னாட்சி நாடாகத் திகழ்கிறது. இந்தி இந்நாட்டின் தேசிய மொழியாக்கப்பட்டுள்ளது. ஆனால் நாட்டின் தேவையை நிறைவு செய்யும் அளவுக்கு இந்தி இன்னும் வளர்ச்சியடைய வில்லை. எனவே, அனைத்துலக மொழியாக விருந்த ஆங்கிலம் மூன்றாம் வகுப்பிலிருந்து சிறுவர்கட்குப் போதிக்கப்படல் வேண்டும். அங்ஙனம் செய்தால் விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப நம் சிறுவர்களும் முன்னேற ஏதுவாகும். ஓர் அயல் மொழியைக் கற்பது சிறுவர்களுக்குச் சுமை யாகாது" என்று உத்தரப் பிரதேசக் கல்விக் கழகத்தின் ஆண்டு விழாவில் பேசிய அம்மாநில முதலமைச்சர் திரு. சி. பி. குப்தா குறிப் பிட்டார்.

**குறிப்பு :** திரு. குப்தா அவர்களின் கருத்து வரவேற்கத் தக்கது - பாராட்டத்தக்கது. இன்னும் சில காலத்துக்கு மட்டுமே ஆங்கிலம் நீடிக்கும் எனக் கூறும் இந்தி ஆதரவாளர்கள், ஆங்கிலம் என்றுமே தேவை என்பதை இத்தகையோர் பேச்சினின்று உணர்ந்து தெளிவு பெறுவார்களாக.

## உ. மதன்மோகன் மாளவியாவின் நூற்றாண்டு விழா

இந்திய விடுதலைக்காக இடைவிடாது உழைத்த பெருமகனார் பண்டித மதன்மோகன் மாளவியாவின் நூற்றாண்டுப் பிறப்பு விழா நாடெங்கிலும் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அவர்க்கு நினைவுச் சின்னம் ஏற்படுத்தப் பொருள் திரட்டப்பட்டு வரு கிறது. 1924ஆம் ஆண்டில் அலகாபாத்தில் தூநதிகளில் கூடும் துறைக் கண் புனலாடலாகாதென ஆங்கில அரசாங்கம் தடை விதித்ததை எதிர்த்துச் சத்தியாக்கிரகம் செய்தவர் இப்பேரறிஞர். வாரணசிப் பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்த பெருமை இவருக்குரியதே. நாட்டுப்பற்றும், தன்னலமற்ற மனப்பான்மையும், கல்வியறிவும்மிக்க இப் பெரியாரைப் பாராட்டுவது இன்றியமையாததே.

**குறிப்பு :** வடநாட்டுப் பிறந்த அறிஞர்களைப் போற்றுவது போலவே கல்வியிற் கரையிலாத தென்னாட்டுப் பிறந்த இராமலிங்க அடிகள், மறைமலையடிகள் போன்ற பெருமக்களையும் அரசினர் விழா வெடுத்துப் போற்றல் கடனாகும் என்பதை அறிவுறுத்த விழைகிறோம்.

## ௩. வடமொழிப் பேரகராதி

விசயநகரத்து மகாராச குமார் 4000 பக்கங்கள் கொண்ட வட மொழிக் கலைக்களஞ்சியப் பேரகராதி (சப்தகல்பதுருமா)யைப் பாரதத் துணைக் குடியரசுத் தலைவர் டாக்டர். ராதாகிருட்டிணன் அவர்களிடம் டிசம்பர் 25ஆம் நாள் கொடுத்துள்ளார். வாரணசியில் வெளியிடப்பட்ட இப்பேரகராதி ஐந்து தொகுதிகளைக் கொண்டது. 'வடமொழியை நாட்டில் பரப்புதற்கு அத்தகைய பெருநூல்கள் துணை செய்யும்' என்று துணைத்தலைவர் குறிப்பிட்டார்.

**குறிப்பு :** வடமொழியைப் போலவே தென்தமிழும் சொல்வளம் மிக்கது. தமிழில் நாடோறும் எண்ணிலாத சொற்கள் புதிதுபுதிதாய்ச் சேர்ந்து கொண்டே வருகின்றன. உலகத்து அறிவனைத்தையும்

தமிழில் வடித்துத்தருவனவாய், இப்போது வெளிப்போந்த கலைக் களஞ்சியங்களினும் பன்மடங்கு பெரியனவாய்த் தமிழில் பல கலைக் களஞ்சியங்கள் தோன்றுவது மிக இன்றியமையாதது.

ச. தமிழகப் புலவர் குழு 10ஆவது கூட்டம்

தமிழகப் புலவர் குழுவின் 10 ஆவது கூட்டம், தைத்திங்கள், 2ஆம் நாள், 15—1—1962) திங்கட்கிழமை காலை 9 மணிக்குத் திருவண்ணாமலையிலுள்ள 'சக்தி விலாச' மாளிகையிற் கூடுகிறது. மாலை 6 மணிக்கு நகராட்சி மன்றம் புலவர் பெருமக்களுக்கு வரவேற்பளிக்கிறது. வழக்கறிஞர் திரு. S. அரங்காச்சாரியார் அவர்களைச் செயலாளராகவும், ஈசான்யமடத்துச் சுவாமிகளைத் தலைவராகவும் கொண்ட வரவேற்புக் குழுவினர் சிறந்த ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். என அமைப்பாளர், திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் அறிவிக்கிறார்.

# மதிப்புரை

**தமிழணங்கு : இலக்கியத் திங்களிதழ்.**

ஆசிரியர்: வித்துவான் மு. த. வேலாயுதனார்.

முகவரி : 74, தியாகு முதலியார் வீதி, புதுவை.

தனி இதழ் 25 காசு. ஆண்டுக் கட்டணம் ரூ 3/-

பிரெஞ்சு நாட்டின் நாகரிகப் பண்பாடும் தமிழ்ப்பண்பாடும் இணைந்து திகழும் புகழ்படைத்ததும், பாரதியார், பாரதிதாசன் போன்ற கவிஞர் பெருமக்களுக்குக் கவிதையூற்றளித்ததும், ஞானப்பேரொளிகளான திரு. அரவிந்தர், திரு. அன்னையார் போன்ற யோகிகளும், தெய்வச் சான்றோர்களும் நெடுநாள் வாழ்ந்து வரும் தவப்பேறு எய்தியதுமான புதுவையிலிருந்து புதிதாக வெளிவரும் இத்தமிழ்த் திங்களில் இணைந்த பண்பாடுகளின் சிறப்புக்களை விளக்கும் தெளிநல் கட்டுரைகள் வெளிப்போதருகின்றன.

மதிப்புரைக்கு அனுப்பப்பட்ட மூன்றும் இதழில் பிரெஞ்சுப் புலவர் 'கய்ல்லி புருய்தோம்' என்பாரின் கவிதைப் பெயர்ப்பும், புதுவையைப் புண்ணியத் திருநிலமாகச் செய்த திரு. அரவிந்தப் பெருந்தகையின் கட்டுரைகளை விளக்கும் இரு கட்டுரைகளும் (இத்தகு கட்டுரைகள் பலவாகத் தொடர்ந்து வெளிவரல் நலம்), படிக்குந்தோறும் இன்பமூட்டுவதாய் ஆறு தொகுதிகளில் அச்சிடப்பட்டிருக்கும் புதுவை ஆனந்தரங்கப் பிள்ளையின் நாட்குறிப்புச் செய்திகளை விளக்கும் கட்டுரையும் படித்தின்புறற்குரியன. பிரெஞ்சுப் பண்பாட்டையும், கவிதை நலத்தையும் அள்ளித் தரும் நல்லிதழாக இத்தமிழணங்கு ஒளிர்வாள் என எதிர்பார்க்கலாம். —மு. ச.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.


## ‘சட்டவியல் வெளியீட்டு விழா




திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள் வரவேற்புரை நிகழ்த்துதல்



உயர்நீதிமன்ற நடுவர் திரு. மா. அனந்தநாராயணன் அவர்கள் நூலை வெளியிட்டுப் பேசுதல்




உயர்நீதிமன்ற நடுவர் திரு. மா. அனந்தநாராயணன் அவர்கள்
நூலை வெளியிடல்




திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் பாராட்டுரை வழங்குதல்



திரு. த. செங்கல்வராயன் அவர்கள் பாராட்டுரை வழங்குதல்



நூலாசிரியர் திரு. மா. சண்முக சுப்பிரமணியம் அவர்கள்
கருத்துரை கூறுதல்



விழாவிற் கலந்துகொண்ட பெருமக்கள் விருந்துண்ணுங் காட்சி



விழாக்கூடத்தில் 'தமிழால் முடியும்' நூற்காட்சி